

தமிழரசு
16.1.1996 ரூ.3
சமுதாய கூட கட்டிடம்
அரசு திட்டப்பணிகள்








சீரிய சிந்தனையாளர் திருவள்ளுவர்!

ஓர் உயர்ந்த இலக்கியத்தின் அடையாளம், அது அறிஞர்கள் அனைவராலும் ஏற்கக் கூடியதாக மட்டும் இருந்தால் போதாது, சாதாரண மக்களாலும் புரிந்துகொள்ளத்தக்கதாக இருக்க வேண்டும். இந்தத் தத்துவத்தை உண்மையாக்கும் ஒரே நூல், திருக்குறள் ஆகும். அளவிலே சிறியது, நடையிலே எளியது, ஆற்றலிலே அரியது, என்ற பெருமைக்கு ஒரே எடுத்துக்காட்டு திருக்குறள். அந்தத் திருமறையை நமக்குத் தந்த சீரிய சிந்தனையாளர் திருவள்ளுவர்.

—மாண்புமிகு முதல்வர்
டாக்டர் ஜெ.ஜெயலலிதா

# இந்த இதழில்...


★ ஏழை எளிய மக்கள் இதயங் குளிர எண்ணற்ற உதவிகள்: பர்கூர் தொகுதியில் மாண்புமிகு முதல்வர் இரண்டு நாள் சுற்றுப் பயணம்........ 2

★ காவிரி நதி நீர்ப் பிரச்சினை: அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் உரை........ 17

★ அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தீர்மானம்........ 22

★ டில்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதல்வரின் முழக்கம்........ 24

★ மாண்புமிகு பிரதமரை வற்புறுத்தி அனைத்துக் கட்சிகள் தீர்மானம்........ 28

★ கர்நாடக அரசுக்கு மாண்புமிகு முதல்வர் ஆணை........ 31

★ நடுவர் மன்றத்தின் தீர்ப்பினைப் புறக்கணிப்பது துரதிருஷ்டவசமானது! மாண்புமிகு முதல்வர் அறிக்கை........ 33

★ ரூ.2,000 கோடி செலவில் தமிழ்நாட்டில் கார் தொழிற்சாலை........ 42




இதழ்தோறும் ஓர் இனிய குறள்:

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்துஅறன்
ஆகுல நீர பிற.

★ ஒருவன் தன் மனத்தில் குற்றம் இல்லாதவனாக இருக்க வேண்டும், அறம் அவ்வளவே, மனத்தூய்மை இல்லாத மற்றவை ஆரவாரத் தன்மை உடையவை.


# தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2027

தைத் திங்கள் : 2

மலர்: 26 இதழ்: 14

16.1.1996

விலை ரூபாய் : 3



எங்கள் அரசு
ஏழை எளிய மக்களின்
நலன் காக்கும் அரசு -
மகளிர் நல அரசு -
மக்கள் நல அரசு

# ஏழை எளிய மக்கள் இதயங் குளிர எண்ணற்ற உதவிகள் !

## பர்கூர் தொகுதியில் மாண்புமிகு முதல்வர் இரண்டு நாள் சுற்றுப் பயணம்

**மாதனக் குப்பம்**

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் பர்கூர் தொகுதியில் இரண்டுநாள் சுற்றுப் பயணத்தின் முதல்நிகழ்ச்சி யாக மாதனக் குப்பம் என்ற கிராமத்திற்கு வருகைபுரிந்து, இரண்டே கால் இலட்சம் ரூபாய் செலவில் 9 ஆழ்குழாய்க் கைப் பம்புகள், 16 இலட்சம் ரூபாய் செலவில் நான்கு மேல்நிலை



மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் 11-1-96 மற்றும் 12-1-96 ஆகிய இரண்டு நாட்கள் தமது சொந்தத் தொகுதியான தர்மபுரி மாவட்டம் பர்கூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பல்வேறு கிராமப் பகுதிகளுக்குச் சென்று 32 கூட்டங்களில் கலந்து கொண்டார். ஒவ்வொரு இடத்திலும் ஊரக வளர்ச்சி, சமூக நலத் திட்டங்கள், குடிநீர் மற்றும் புதியப் பள்ளிக் கட்டடங்கள் போன்ற பல வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கி வைத்தார். மேலும் ரூ.285 கோடி மதிப்பீட்டில் பல புதிய திட்டங்களைத் தொடங்கிவைத்தும், அடிக்கல் நாட்டியும், அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கியும் இரண்டு நாட்களிலும் இலட்சக்கணக்கான மக்களையும் சந்தித்தார்.

ஏழை மக்களின் இதயத்தைக் கவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் சுற்றுப்பயணச் சிறப்பைச் சுட்டிக்காட்டுகிறது இந்தத் தொகுப்பு.

நீர்த்தேக்கத் தொட்டிகள், இரண்டு இலட்சம் ரூபாய் செலவில் சமுதாயக் கூடம் ஒன்று, இரண்டு இலட்சம் ரூபாய் செலவில் அரசு உயர்நிலைப் பள்ளிக் கட்டடம், ஊராட்சி அலுவலகக் கட்டடம், சத்துணவு. மற்றும் சமையலறைக் கட்டடம், ஆகியவை கடந்த நான்கரை ஆண்டுக் கால கட்டத்தில் இவ்வூரில் அமைக்கப் பட்டுள்ளதாகத் தெரிவித்தார். சாலை மேம்பாட்டிற்காக ரூபாய் 8 இலட்சம் செலவில் மேம்பாட்டுப் பணிகளும், தமிழ் நாட்டுப் பாடநூல் கழகத்தின் சார்பில், இரண்டேகால் இலட்சம் ரூபாய் செலவில் புதிய பள்ளிக் கட்டடமும் கட்டி வழங்கப்பட்டுள்ளன. இரண்டு இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்ட தொடக்கப் பள்ளிக் கட்டடத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார்.

**எலத்தகிரி**

கடந்த நான்கரை ஆண்டு களில் 16 இலட்சம் ரூபாய் செலவில் 4 மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள், 2 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு சமுதாயக் கூடம், இரண்டு இலட்சம் ரூபாய் செலவில் அரசு உயர்நிலைப் பள்ளிக் கட்டடம், ஊராட்சி அலுவலகக் கட்டடம், சத்துணவுக்கூட கட்டடம், சமையலறைக் கட்டடம் மற்றும் இரண்டேகால் இலட்சம் ரூபாய் செலவில் 9 ஆழ் குழாய்க் கைப்பம்புகள், 8 இலட்சம் ரூபாய் செலவில் சாலை மேம்பாட்டுப் பணிகள், தமிழ் நாட்டுப் பாடநூல் கழகத்தின் சார்பில் இரண்டேகால் இலட்சம் ரூபாய் செலவில் ஒரு பள்ளிக்



கட்டடம் போன்ற பல்வேறு வசதிகள் ரூபாய் 38 இலட்சம் செலவில் செய்யப்பட்டுள்ளன. நிகழ்ச்சி நாளன்று இரண்டரை இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட சமுதாயக் கூடத்தையும், ஏழரை இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியையும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார். மேலும் முருக்கம்பாலம் கிராமத்தில் 1 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட ஆரம்பப் பள்ளிக் கட்டடத்தையும், பாலைப்பள்ளியில் 67 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட புதிய சத்துணவுக் கூடத்தையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார். இதுதவிர, காத்தாடிக் குப்பத்தில் ஒன்றரை இலட்சம் ரூபாய் செலவில் 7 தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினார்.




**ஓரப்பம்**

அடிப்படை வசதிகளில் மிக முக்கியமான குடிநீர் வசதியை வழங்க, 9 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 3 மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள், ஒன்றே முக்கால் இலட்சம் ரூபாய் செலவில், 6 ஆழ்குழாய்க் கைப்பம்புகள், நாலே முக்கால் இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சாலை மேம்பாட்டுப் பணிகள், இரண்டேகால் இலட்சம் ரூபாய் செலவில் பள்ளிக் கட்டடம் ஒன்று, 87 ஆயிரம் ரூபாய் செலவில் ஊராட்சி அலுவலகக் கட்டடம், 60 ஆயிரம் ரூபாய் செலவில் கால்நடை மருத்துவ துணை மையம் ஒன்று, 1 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் 4 சந்தை அங்காடிகளும், ஒன்றரை இலட்சம் ரூபாய் செலவில் 2 சத்துணவு மையக் கட்டடங்கள் போன்றவை கடந்த நான்கரை ஆண்டுகளில் கிட்டத்தட்ட 31 இலட்சம் ரூபாய் செலவில் செய்யப்பட்டுள்ளன.

ஓரப்பம் கிராமத்தில் இரண்டேகால் இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட கூடுதல் பள்ளிக் கட்டடத்தையும், இரண்டே முக்கால் இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட 12 தொகுப்பு வீடுகளையும், ஓரப்பம் மற்றும் மருதையப் பள்ளிக் கிராமங்களில் ஒன்றரை இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட 2 மதிய உணவு சத்துணவுக் கூடக் கட்டடங்களையும் ஓரப்பம் கிராமத்தில் 1 இலட்சத்து 35 ஆயிரம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்ட சந்தை அங்காடிகளையும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார். மேலும், 2 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடங்களும் விரைவில் அமைக்கப்படும் என்று அறிவித்தார்.

**கந்திக்குப்பம்**

கிட்டத்தட்ட பதினாறரை இலட்சம் ரூபாய் செலவீட்டில் கடந்த நான்கரை ஆண்டுகளில் 17 தொகுப்பு வீடுகள், 2 சந்தைக் கட்டடங்கள், 3 சிறு பாலங்கள், 2 கைப்பம்புகள், சாலை மேம்பாட்டிற்காக ஏழரை இலட்சம் ரூபாய், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 1 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் மதிப்பில், மானியத்துடன் கூடிய கடன் உதவிகள் 35 பேர்களுக்கு இப்பகுதியில் வழங்கப்பட்டுள்ளன. இப்பகுதியில் 87,000 ரூபாய் செலவில் கட்டப்பட்ட ஊராட்சி அலுவலகக் கட்டடத்தையும், 80 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட சந்தைக் கட்டடத்தையும், ஒரு இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட 4 தொகுப்பு வீடுகளையும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்.

**சின்னமட்டாரப்பள்ளி**

சின்னமட்டாரப்பள்ளியில் 4 இலட்சம் ரூபாய் செலவில் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தையும், இரண்டேகால் இலட்சம் ரூபாய்

செலவில் கட்டப்பட்ட கூடுதல் வகுப்பறைக் கட்டடத்தையும், 87 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட ஊராட்சி அலுவலகக் கட்டடம் ஆகியவற்றை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தும், சச்சாலிக்காணூர் கிராமத்தில், 2 இலட்சத்து 64 ஆயிரம் ரூபாய் செலவில் 12 தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் பேசுகையில் சின்னமட்டாரப் பள்ளி ஊராட்சிப் பகுதியில் ஏறக்குறைய 40 இலட்சம் ரூபாய் செலவில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் செய்யப்பட்டுள்ளன என்றார். 11 இலட்சம் ரூபாய் செலவில் 3 மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளும், 2 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் செலவில் 13 தொகுப்பு வீடுகளும், ஒன்றரை இலட்சம் ரூபாய் செலவில் 2 சத்துணவுக் கூடக் கட்டடங்களும், 5 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் செலவில் 3 பள்ளிக் கட்டடங்களும், ஊராட்சி அலுவலகக் கட்டடம், சமையலறைக் கட்டடம், நியாய விலை அங்காடிக் கட்டடம், 4 சிறு பாலங்கள் மற்றும் 12 ஆழ் குழாய்க் கைப்பம்புகள் முதலியவை அடங்கும். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 92 பேருக்கு 6 இலட்சம் ரூபாய் அளவுக்குக் கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தெரிவித்தார்.

### வரட்டனப்பள்ளி

வரட்டனப்பள்ளி ஊராட்சி கடந்த நான்கரை ஆண்டுக் காலத்தில் 117 இலட்சம் ரூபாய் செலவில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் செய்யப்பட்டுள்ளன. அதில் 8 இலட்சம் ரூபாய் செலவில் 2 மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளும், மூன்றே முக்கால் இலட்சம் ரூபாய் செலவில் 2 பள்ளிக் கட்டடங்களும், 2 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு சமுதாயக் கூடமும், இதுதவிர ஒரு சத்துணவுக்கூடக் கட்டடம், 2 சமையலறைக் கட்டடங்கள், 2 சிறிய பாலங்கள், 9 ஆழ்குழாய்க் கைப்பம்புகள் முதலியவை அமைத்துத் தரப்பட்டுள்ளன.

சாலை மேம்பாட்டிற்காகக் கிட்டத்தட்ட 90 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. மேலும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 105 பேருக்கு ஐந்தரை இலட்சம் ரூபாய் மதிப்பில் கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இரண்டரை இலட்சம் ரூபாய் மதிப்பில் நலிந்த பிரிவைச் சேர்ந்த 30 குடும்பங்களுக்கு வீடு கட்ட கூட்டுறவு வீடு கட்டும் திட்டத்தின் கீழ் கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் இரண்டேகால் இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட உயர்நிலைப் பள்ளிக் கட்டடத்தையும், ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் தேசுப்பள்ளிக் கிராமத்தில் கட்டப்பட்ட தொடக்கப் பள்ளிக் கட்டடத்தையும், ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் பெரியமட்டாரப்பள்ளியில் கட்டப்பட்ட பள்ளிக் கட்டடத்தையும், வரட்டனப்பள்ளி, திம்மநாயனப்பள்ளி, குருவிநாயனப்பள்ளி ஆகிய இடங்களில் 4 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட 17 தொகுப்பு வீடுகளையும், குருவிநாயனப்பள்ளி, பெலவர்த்தி ஆகிய இடங்களில், ஒன்றரை இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட சத்துணவுக் கூடக் கட்டடங்களையும், 4 இலட்சம் ரூபாய் செலவில் ஓதிக்குப்பத்தில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியையும் நிகழ்ச்சியன்று திறந்து வைத்து, வரட்டனப்பள்ளி, பெலவர்த்தி ஆகிய இடங்களில் மூன்றேகால் இலட்சம் ரூபாய் மதிப்பில் 15 தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினார். 10 இலட்சம் ரூபாய் செலவில் குருவிநாயனப் பள்ளியில் பொதுப்பணித்துறை-மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணையின் பேரில் ஒரு கசிவுக் குட்டையை அமைத்துள்ளது.

### சிந்தகம்பள்ளி

கடந்த நான்கரை ஆண்டுகளில் சின்னமட்டாரப்பள்ளி ஊராட்சிப் பகுதியில் 40 இலட்சம் ரூபாய் செலவில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் செய்யப்பட்டுள்ளன. 11 இலட்சம் ரூபாய் செலவில் 3 மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள், 2



இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய செலவில் 13 தொகுப்பு வீடுகள், ஒன்றரை இலட்சம் ரூபாய் செலவில் 2 சத்துணவுக்கூடக் கட்டடங்கள், 5 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் செலவில் 3 பள்ளிக் கட்டடங்கள், ஊராட்சிப் அலுவலகக் கட்டடம், நியாய விலை அங்காடிக் கட்டடம், சமையலறைக் கட்டடம், 4 சிறு பாலங்கள், 12 ஆழ்குழாய்க் கைப்பம்புகள் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. மேலும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 92 பேருக்கு 6 இலட்சம் ரூபாய் கடனுதவிகள் செய்யப்பட்டுள்ளன.

நிகழ்ச்சி நாளன்று தமிழ் நாட்டுப் பாடநூல் கழகத்தின் சார்பில் சிந்தகம்பள்ளி உயர் நிலைப் பள்ளிக்கு இரண்டேகால் இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட கூடுதல் வகுப் பறைக் கட்டடத்தையும், ஒரு இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட பொது விநியோக அங்காடிக் கட்டடத்தையும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்.

**காரகுப்பம்**

கடந்த நான்கரை ஆண்டு களில் ஆறரை இலட்சம் ரூபாய் செலவில் 37 கான்கிரீட் தளம் அமைந்த தொகுப்பு வீடுகளும், 2 பள்ளிக் கட்டடங்கள், 6 சிறு பாலங்கள், ஒரு சந்தைக் கட்டடம், 2 சமையலறைக் கூடங்கள், 4 ஆழ்குழாய்க் கைப் பம்புகள் அமைத்துத் தரப் பட்டுள்ளன. சாலை மேம்பாட் டிற்காக 20 இலட்சம் ரூபாய் அளவுக்குச் செலவு செய்யப் பட்டுள்ளது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 6 பேருக்குக் கடனுதவி, 12 குடும்பங்களுக்கு வீடு கட்ட கடனுதவி, 4 பெண்மணிகளுக்கு இலவசத் தையல் இயந்திரங் களும் வழங்கப்பட்டுள்ளன.

நிகழ்ச்சி நாளன்று மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் எமக்கலநத்தம் உயர்நிலைப் பள்ளிக்குத் தமிழ்நாட்டுப் பாட நூல் கழகத்தின் சார்பில் இரண்டேகால் இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்ட கூடுதல் வகுப்பறைக் கட்டடத் தையும், ஒன்றரை இலட்சம் ரூபாய் செலவில் காரகுப்பம் தொடக்கப் பள்ளியின் கூடுதல் கட்டடத் தையும், திறந்து வைத்தும் பார்கூர் ஆற்றின் குறுக்கே 6 இலட்சம் ரூபாய் மதிப்பில் புதிய அணைக்கட்டுக் கட்டவும் 88 ஆயிரம் ரூபாய் மதிப்பில் 4 தொகுப்பு வீடுகள் கட்டவும் அடிக்கல் நாட்டினார்.

**மல்லம்பாடி**

மல்லம்பாடி கிராமத்தில் இரண்டேகால் இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட பள்ளிக் கட்டடத்தையும், 87 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட ஊராட்சிமன்ற அலுவலகக் கட்டடத்தையும், 40 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட சந்தைக் கட்டடத்தையும், வெங்கடாபுரத்தில் ஒன்றரை இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட ஆரம்பப் பள்ளிக் கட்டடத்தையும், 9 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்ட புதிய அணைக் கட்டையும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் நிகழ்ச்சி நாளன்று திறந்து வைத்தார்.



கடந்த நான்க்ரை ஆண்டு களில் கிட்டதட்ட 24 இலட்சம் இலட்சம் ரூபாய் மதிப்பில் ஒரு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி, 8 ஆழ்குழாய்க் கைப் பம்புகள், 2 பள்ளிக் கட்டடங்கள், 4 நீர்ப்பாசனத் திட்டங்கள், 3 சமையலறைக் கட்டடங்கள் முதலியவை கட்டித் தந்ததோடு, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 47 பேருக்கு 3 இலட்சம் ரூபாய் கடனுதவியும், 21 குடும்பங்களுக்கு ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் வீடு கட்ட கடனும் வழங்கப்பட்டுள்ளதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்தார்.



**கப்பல்வாடி**

கப்பல்வாடியில் எட்டரை இலட்சம் ரூபாய் செலவில் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையக் கட்டடம் தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தின் சார்பில் இரண்டே கால் இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட கூடுதல் வகுப்பறைக் கட்டடம், 22 இலட்சம் ரூபாய் செலவில் நெடுஞ்சாலையில் கட்டி முடிக்கப்பட்ட பாலம், 42 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்ட புதிய பள்ளிக் கட்டடங்கள், தொகுப்பு வீடுகள், சத்துவுக்கூட கட்டடங்கள் போன்றவற்றை நிகழ்ச்சி நாளன்று மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்.

சிங்கரலப்பள்ளியில் 5 தொகுப்பு வீடுகள், சேக்கணாம் பட்டியில் 10 தொகுப்பு வீடுகள், ஆம்பள்ளியில் 8 தொகுப்பு வீடுகள் முதலியன 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்ட அடிக்கல் நாட்டி பேசும்போது, கடந்த நான்கரை ஆண்டுகளில் மல்லம்பாடி ஊராட்சிப் பகுதி வளர்ச்சிக்காக 24 இலட்சம் ரூபாய் செலவில் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட தாகவும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 3 இலட்சம் ரூபாய் மதிப்பில் 47 பேருக்குக் கடன் உதவிகள், 21 குடும்பங்களுக்கு ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கடனும் வழங்கப்பட்டுள்ளதாக மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தெரிவித்தார். மேலும், குட்டூர் கிராமத்தில் ஆறரை இலட்சம் ரூபாய் செலவில் ஒரு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி விரைவில் கட்டப்படும் என்றும் தெரிவித்தார்.



**மாடரஹள்ளி**

நாகல்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் 55 இலட்சம் ரூபாய் மதிப்பில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப் பட்டுள்ளன. இதில் ரூ. 35 இலட்சம் சாலை மேம்பாட்டுப் பணிக்கும் மீதமுள்ள தொகை பல்வேறு நலத்திட்டப் பணிகளுக்கும் செலவு செய்யப்பட்டுள்ளது. 29 பேருக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், கடனுதவியும், 11 பேருக்குத் திருமண நிதி உதவியும், 3 பேருக்கு இலவசத் தையல் இயந்திரங்களும் வழங்கப் பட்டன.

மாடரஹள்ளியில் ஒன்றரை இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட தொடக்கப் பள்ளி, குண்டேபள்ளி மற்றும் பள்ளத்தூரில் ஒன்றரை இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட பள்ளிக் கட்டடங்களைத் திறந்து வைத்தும், நாகப்பட்டியில் 66,000 ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள 3 தொகுப்பு வீடுகளுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

**கன்னன்டஹள்ளி**

கடந்த நான்கரை ஆண்டுகளில் 31 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் இப்பகுதியின் வளர்ச்சிப் பணிகள் செயல்படுத்தப் பட்டுள்ளன. அவை, ஒரு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி, 2 பள்ளிக் கட்டடங்கள், 12 தொகுப்பு வீடுகள், 3 ஜீவன்தாரா கிணறுகள், 3 சமையல் அறைக் கூடங்கள், சாலை மேம்பாட்டுப் பணிகள், பேருந்து நிழல் குடை, நீர் வடிகால் பணிகள் முதலியவை யாகும்.

எட்டேகால் இலட்சம் ரூபாய் செலவில் கன்னன்டஹள்ளியில் கட்டி முடிக்கப்பட்ட ஆரம்பச் சுகாதார நிலையக் கட்டடம், ஒன்றரை இலட்சம் ரூபாய் செலவில் அத்திகானூரில் கட்டப்பட்ட தொடக்கப் பள்ளிக் கட்டடத்தையும் திறந்து வைத்த மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் கூச்சூரில் 15 ஆதி திராவிடக் குடும்பங்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டவும் பல புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

**பெருகோபனபள்ளி**

பெருகோபனபள்ளி மற்றும் அதனைச் சார்ந்துள்ள பகுதிகளுக்காகப் பதினேழரை இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட ஆரம்பச் சுகாதார நிலையக் கட்டடத்தையும், பணியாளர்கள் குடியிருப்புக் கட்டடத்தையும், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் சார்பில் கட்டப்பட்ட கூடுதல் பள்ளிக் கட்டடத்தையும், 5 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்ட ஒரு பாலத்தையும் முறைப்படி மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் பொதுமக்களுக்காகத் திறந்து வைத்தார்.

அப்போது அவர் பேசுகையில், கடந்த நான்கரை ஆண்டுகளில் இப்பகுதியின் வளர்ச்சிக்காக 57 இலட்சம் ரூபாய் செலவில் பல வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப் பட்டுள்ளன. அவற்றுள் 5 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்ட 2 மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளும், பதினேழரை இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட ஆரம்பச் சுகாதாரக் கட்டடமும், ஒன்றரை இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட 8 தொகுப்பு வீடுகளும் 24 இலட்சம் ரூபாய் செலவில் செய்யப்பட்ட சாலை மேம்பாட்டுப் பணிகளும் அடங்கும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டார்.

**தொகாப்பள்ளி**

தொகாப்பள்ளியில் சாலை மேம்பாட்டுப் பணிகளுக்கு மட்டும் கிட்டத்தட்ட 33.5 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது. இது தவிர 5 தொகுப்பு வீடுகள், 1 சமையல் அறைக் கட்டடம் போன்றவையும் ஒருங்கிநைத ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 61 பேருக்குக் கடன் உதவிகளும் 10 பேருக்குக் கறவை மாடுகளும் கடந்த நான்கரை ஆண்டுகளில் வழங்கப்பட்டுள்ளது. ஆக கூடுதலாக கிட்டத்தட்ட 30 இலட்சம் ரூபாய்க்கும் மேலாக இப்பகுதியில் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன என்று தெரிவித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தொகாப் பள்ளியில் உயர்நிலைப் பள்ளிக் கட்டடத்தையும், 1 இலட்சத்து 13,000 ரூபாய் செலவில் கட்டப்பட்ட சமையலறைக் கட்டடத்தைத் திறந்து வைத்தார். இதுதவிர பில்லகொட்டாய்ப் பகுதியில் ஒன்றே முக்கால் இலட்சம் ரூபாய் செலவில் தொடக்கப் பள்ளிக் கட்டடத்தைக் கட்ட அடிக்கல் நாட்டினார்.

**ஜெகதேவி**

இப்பகுதியின் வளர்ச்சிக்காக 26 இலட்சம் ரூபாய் கடந்த நான்கரை ஆண்டுகளில் வளர்ச்சித் திட்டத்திற்காகச் செலவு செய்யப்பட்டுள்ளது. இதில் ஒரு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி, 15 தொகுப்பு வீடுகள், 2 சமையலறைக் கட்டடங்கள் மற்றும் 9 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சாலை மேம்பாட்டுத் திட்டம் ஆகியவை செயல்படுத்தப்பட்டுள்ளன. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்



திட்டத்தின் கீழ் 24 பேருக்கு 5 இலட்சம் ரூபாய் கடனுதவியும், 23 பேர்களுக்கு வீடு கட்டக் கடனும், ஒரு இலட்சம் ரூபாய் செலவில் 4 ஆழ்குழாய்க் கைப் பம்புகளும் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளன. தற்போது 15 தொகுப்பு வீடுகளும், நாலரை இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட ஒரு தொடக்கப் பள்ளிக் கட்டடமும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களால் திறந்து வைக்கப் பட்டது.

**மத்தூர்**

மத்தூர் மற்றும் சுற்றுப்புறப் பகுதியில் கடந்த நான்கரை ஆண்டுகளில் 50 இலட்சம் ரூபாய் மதிப்பில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் செயல் படுத்தப்பட்டுள்ளன. அவற்றுள் 16 தொகுப்பு வீடுகள், 2 ஜீவன்தாரா கிணறுகள், ஒரு நியாய விலை அங்காடிக் கட்டடம், 4 பள்ளிக் கட்டடங்கள், 3 தொலைக்காட்சி அறைகள், ஒரு நூலகக் கட்டடம், 2 சமையல் அறைக் கட்டடங்கள், 1 மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி ஆகியவை அடங்கும். மேலும், 49 குடும்பங்களுக்கு நான்கரை இலட்சம் ரூபாய் அளவுக்கு வீட்டுக் கடன் வசதியும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 80 பேருக்கு மானியத்துடன் கூடிய கடன் வசதிகளும் இப்பகுதியில் செய்யப்பட்டுள்ளன.

மத்தூர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஒரு சமுதாயக் கூடம், ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஒரு கலையரங்கம், 7 கூடுதல் பள்ளிக் கட்டடங்கள், மலையாண்ட ஹள்ளி, நத்தகயம் ஆகிய பகுதிகளில் 25 தொகுப்பு வீடுகள், நடுப்பட்டியில் 55 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு புதிய பாலம், கணுக்கானூர் கிராமத்தில் ஒரு சத்துணவுக் கூடக் கட்டடம் ஆகியவற்றை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் பொதுமக்களுக்கு அர்ப் பணித்தார்.

மேலும், மத்தூரில் ஆதி திராவிட மாணவர்களுக்கும், பிற்படுத்தப்பட்ட மாணவர் களுக்கும் தலா ஒரு தங்கும் விடுதி கட்டடம் கட்ட ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டில் கட்ட முதல்வர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார். சீர்மிகு நற்பள்ளி அதாவது School of Excellence 45 இலட்சம் ரூபாய் செலவில் களர்பதி என்ற கிராமத்தில் பத்தரை ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கவும் பொதுமக்களின் வசதிக்காக அருள்மிகு சென்றாயன் மலைத் திருக்கோயிலுக்கு ஒரு பக்தர்கள் ஓய்வு மண்டபம் மூன்றரை இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், மத்தூரில் புதிய பயணியர் மாளிகை ரூபாய் 20 இலட்சம் செலவில் கட்டவும், சாலூர் மற்றும் வாழிப்பட்டி கிராமங் களை இணைக்கும் 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும் பாலம் ஒன்றுக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.




**மத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம்**

மத்தூர் மற்றும் ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியப் பகுதியைச் சேர்ந்த 40 கிராமங்களுக்குக் குடிநீர் வழங்க 2 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் மத்தூர் கூட்டுக் கூடிநீர் திட்டத்திற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அடிக்கல் நாட்டினார். விரைவில் இப் பகுதியில் ஒரு தொழிற்பேட்டை உருவாவதைக் கருத்தில் கொண்டு ஒரு பல்வகைத் தொழில் நுட்பப் பயிலகம் Poly-technic ஏற்படுத்தப்படும் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்தார்.

தொன்மையான பகுதி என்றாலும் இப்பகுதி வளர்ச்சி அடையாமலே இருந்ததை நான் பொது வாழ்க்கையில் ஈடுபட்ட பின்னர், பல முறை நேரில் கண்டிருக்கிறேன். இப்பகுதியின் பிற்பட்ட தன்மையைப் போக்கி, முன்னேற்றம் அடைந்த பகுதி யாக மாற்றி அமைக்க வேண்டும் என்ற ஒரு தணியாத ஆசை என் மனதில் எழுந்தது. அதன் விளைவாகத்தான் கடந்த சட்டமன்றப் பொதுத் தேர்தலில் இப்பின்தங்கிய மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பகுதியான பர்கூர் சட்டமன்றத் தொகுதி யைத் தேர்ந்தெடுத்துப் போட்டி யிட்டு உங்களது அபரிமிதமான அன்பையும் ஆதரவையும் யையும் எண்ணிப் பார்க்கும் போது என் மனம் மகிழ்ச்சி அடைகின்றது. உழவும் தொழிலும் செழித்துள்ளன. இப்பகுதி வாழ் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்துள்ளது. குறிப்பாக, அடிப்படை வசதிகளை இம்மாவட்டத்து மக்களுக்கும் பர்கூர் தொகுதி வாழ் மக்களுக்கும் பெற்றுத் தருவதில் எங்கள் அரசு முனைப்புடன் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

மாநில அளவில் நிறை வேற்றப்படும் அனைத்துத் திட்டங்களும் பர்கூர் சட்ட மன்றத் தொகுதியிலும், இந்த



**11.1.1996 அன்று மாலை 5.00 மணிக்கு பர்கூரில் நடைபெற்ற அரசு தொடக்க விழா நிகழ்ச்சியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை:**

**த**ர்மபுரி மாவட்டம் சரித்திரப் புகழ் வாய்ந்த ஒரு பெற்றுத் தேர்தலில் வெற்றிப் பெற்று முதலமைச்சராகப் பதவியேற்றேன்.

கடந்த நான்கரை ஆண்டுக் காலகட்டத்தில் இந்த மாவட்டம் கண்டுள்ள ஒட்டு மொத்த சமுதாய வளர்ச்சியையும் தனி நபர் பொருளாதார வளர்ச்சி மாவட்டத்திலும் ஒரு புதிய முனைப்புடன் செயல்படுத்தப் பட்டுள்ளன. அதுமட்டுமின்றி, பல புதிய வளர்ச்சித் திட்டங்கள் குறிப்பிட்ட சில மாவட்டங்களில் செயல்படுத்தப்படும்போது தர்மபுரி மாவட்டமும் அந்த மாவட்டங்களில் ஒன்றாக இடம் பெற்றுப் பயன் அடைந்து

வந்துள்ளது.

இப்பகுதியில் இன்று காணப்படும் வளர்ச்சி, என்னைப் பொறுத்த வரையில் ஒரு மகத்தான தொடக்கம் தான். இந்த வளர்ச்சி மென்மேலும் தொடர வேண்டும் என்பதே எனது ஆசை. அவ்வாறு ஒரு முழுமையான வளர்ச்சியை இந்த மாவட்டம் பெறவேண்டும் என்பதே எனது இலட்சியம். அந்த இலட்சியத்தை அடைய உங்கள் அன்புச் சகோதரியின் அரசு முனைப்புடன் தொடர்ந்து செயலாற்றும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மாவட்டத்திற்குக் குறிப்பாக எனது தொகுதியான பர்கூர் சட்டமன்றத் தொகுதிக்கு நான் வந்த போதெல்லாம் எனக்கு நீங்கள் அளித்த மாபெரும் வரவேற்பையும் என் மீது நீங்கள் காட்டி வருகின்ற அபரிமிதமான அன்பையும் பாசத்தையும் மகத்தான ஆதரவையும் இங்கு நினைவு கூரக் கடமைப்பட்டுள்ளேன். உங்களது அன்பும், ஆதரவும் இம்மாவட்டத்தின் வளர்ச்சிக்கும் இந்தத் தொகுதியின் வளர்ச்சிக்கும் மேலும் பல புதிய திட்டங்களைச் செயல்படுத்தத் தூண்டும் துண்டுகோலாக அமைந்துள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மாவட்டத்தின் வளர்ச்சீக்காகவும், பர்கூர் சட்டமன்றத் தொகுதியின் முன்னேற்றத்திற்காகவும் நான் பல்வேறு நேரங்களில் அறிவித்த அறிவிப்புகள் கிட்டத்தட்ட முழுமையாக நிறைவேற்றப் பட்டுள்ளன. இது எனக்கு ஒரு புறம் மன நிறைவைத் தந்தாலும், இந்த மாவட்டமும் பர்கூர் சட்டமன்றத் தொகுதியும் ஒரு காலத்தில் பிற்பட்ட பகுதிகளாக இருந்தன என்பது ஒரு பழங்கனவாக மாற வேண்டும் என்பதே எனது தணியாத ஆசை ஆகும். நிச்சயம் உங்கள் அன்புச் சகோதரி இதை நிறைவேற்றியே காட்டுவேன் என்று உங்களுக்கு உறுதி கூறுகிறேன்.

தர்மபுரி மாவட்டத்தின் பிற்படுத்தப்பட்ட தன்மையைப் போக்க நாங்கள் செயல்படுத்திய திட்டங்கள் இன்று பயன் தரத் தொடங்கியுள்ளன. இம் மாவட்டத்தில் பல புதிய தொழில்கள் உருவாகி உள்ளன. தொழில் வளர்ச்சி கட்டமைப்பு வசதிகள் பெருகி உள்ளன. மின் வசதி, சாலை வசதி, போக்கு வரத்து வசதி, தொலைத் தொடர்பு வசதி போன்ற அனைத்து அடிப்படை வசதி களுடன் கூடிய புதிய தொழில் பேட்டைகள் உருவாக்கப் பட்டுள்ளன. மேலும் உருவாகி வருகின்றன. குறிப்பாக, இம் மாவட்டத்தின் சாலை மேம் பாட்டிற்கும், போக்குவரத்து வசதிக்கும் இதுவரை என்றும் இல்லாத அளவுக்குப் பல கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளன. பல புதிய கல்வி நிலையங்கள் இம்மாவட்டத்தின் ஒட்டுமொத்த கல்வி அறிவை வளர்ப்பதற்கு ஏற்படுத்தப்பட்டுள்ளன. பெண் கல்வியும், தொழிற் கல்வியும் இம்மாவட்டத்தில் இன்று முன்னுரிமைப் பெற்றுள்ளன.

இம்மாவட்டம், குறிப்பாக, பர்கூர் சட்டமன்றத் தொகுதி எழுத்தறிவில் பின்தங்கிய நிலையில் இருந்ததை மாற்றிட, கிருஷ்ணகிரி மற்றும் பர்கூரில் புதிய மகளிர் கலைக் கல்லூரி களும், ஒரப்பம் கிராமத்தில் ஒரு Polytechnic -க்கும் 1994-95 முதல் பர்கூரில் ஒரு பொறியியற் கல்லூரியும் ஆரம்பிக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன. ஒரப்பம் கிராமத்தில், செயல் பட்டு வருகின்ற Polytechnic இந்த மாவட்டத்தின் இரண்டாவது Polytechnic ஆகும். அதற்குரிய புதிய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு இன்று என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. Industrial Training Institute தொழில் பயிற்சி நிலையம் இம்மாவட்டத் தில் ஓசூரிலும், தர்மபுரியிலும் மட்டும் இருந்து வந்துள்ளது. எங்கள் ஆட்சிக் காலத்தில், பர்கூரில் புதிதாக ஒன்று ஏற்படுத்தப்பட்டுத் தற்போது செயல்பட்டு வருகிறது.

சீர்மிகு நற்பள்ளி (Sch00l of Excellence) போச்சம்பள்ளிக்கும் மத்தூருக்கும் இடைப்பட்ட களர்பதி கிராமத்தில் 45 இலட்சம் ரூபாய் செலவில் விரைவில் உருவாகும். அதற்கு நாளை நான், போச்சம் பள்ளியில் நடைபெறும் விழாவில் அடிக்கல் நாட்ட உள்ளேன்.

நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின் 10.25 கோடி ரூபாய் செலவில் 650 ஆரம்பப் பள்ளி களுக்குக் கூடுதல் கட்டடங் களும், 6.5 கோடி ரூபாய் செலவில் 243 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டடங்களும் இம் மாவட்டத்தில் உருவாக்கப்



பட்டுள்ளன. இது ஒரு மாபெரும் சாதனை ஆகும். மேலும், 60 புதிய ஆரம்பப் பள்ளிகளும், 5 உயர்நிலைப் பள்ளிகளும் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன. 15 ஆரம்பப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகளாகவும், 15 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 7 உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்தப்பட்டுள்ளன.

15 இலட்சம் ரூபாய் செலவில் 176 நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கழிப்பிட வசதிகள் செய்து தரப்பட்டுள்ளது ஒரு முன்மாதிரித் திட்டமாகும். கடந்த நான்கரை ஆண்டுக் காலகட்டத்தில் பர்கூர் சட்டமன்றத் தொகுதியில் மட்டும் 88 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிக் கட்டடங்கள் கட்ட ஒன்றரைக் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அவற்றில், 68 கட்டடங்களுக்குக் கட்டுமானப் பணிகள் நிறைவு பெற்று உள்ளன. 20 கட்டடங்களுக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதேபோல 47 உயர்நிலைப் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்ட ஒரு கோடியே 10 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அவற்றில் 37 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 10 கட்டடங்கள் தற்போது கட்டப்பட்டு வருகின்றன.

மேலும் 10 புதிய ஆரம்பப் பள்ளிகளும், 5 உயர்நிலைப் பள்ளிகளும், 2 புதிய மேல்நிலைப் பள்ளிகளும் பர்கூர் தொகுதியில் இதுவரை புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒரு உயர்நிலைப் பள்ளியும், இரண்டு மேல்நிலைப் பள்ளிகளும், மகளிருக்கான பள்ளிகள் என்பதைப் பெருமிதத்துடன் குறிப்பிட விரும்புகிறேன். அதுமட்டுமின்றி, 14 பள்ளிகள் இந்தக் குறுகிய காலகட்டத்தில் நடுநிலைப் பள்ளி தரத்திலிருந்து, உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டுள்ளன. அவற்றில் 3 பள்ளிகள் மகளிருக்கான பள்ளிகள். உயர்நிலைப் பள்ளிகளிலிருந்து மேல்நிலைப் பள்ளிகளாக 5 பள்ளிகள் உயர்த்தப்பட்டுள்ளன. இவற்றில் 2 பள்ளிகள் மகளிருக்கான பள்ளிகள்.

பர்கூர் பகுதியில் 4 பிற்பட்ட மாணவர்களுக்கான விடுதிகளும் ஒரு ஆதிதிராவிடப் பெண்களுக்கான விடுதியும் இந்த நான்கரை ஆண்டு காலகட்டத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது ஒரு மாபெரும் சாதனை ஆகும். தர்மபுரி மாவட்டத்தில், 2 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பில் 328 சத்துணவுக் கூடங்கள் கட்டப்பட்டுள்ளன. பர்கூர் சட்டமன்றத் தொகுதியில் 104 சத்துணவுக் கூடங்கள் கட்ட 81 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அவற்றில் 83 கட்டடங்கள் இதுவரை கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 21 கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

பர்கூர் பகுதி வாழ் மக்களின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு **66** இலட்சம் ரூபாய் செலவில் ஒரு புதிய பேருந்து நிலையம் கட்டுவதற்கு உங்கள் அன்புச் சகோதரியின் அரசு ஆணையிட்டது. பேருந்து நிலையத்தின் கட்டுமான பணி முடிந்து விட்டாலும், சமுதாயக் கூடம் கட்டும் பணி தற்போது நடைபெற்று வருகின்றது. பர்கூர் தொகுதியில் நெடுஞ்சாலை களில் 8 பாலங்கள் கட்டுவதற்கு **3** கோடியே **20** இலட்சம் ரூபாய் உங்கள் அன்புச் சகோதரியின் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு அவற்றில் **6** பாலங்கள் இதுவரை கட்டி முடிக்கப் பட்டுள்ளன. பல காலங்களாக நிறைவேற்றப்படாமல் இருந்த கோரிக்கைகள் எங்கள் ஆட்சிக் காலத்தில்தான் நிறைவேற்றப் பட்டுள்ளன என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பர்கூர் சட்டமன்றத் தொகுதியில் இதுவரை **112** சிறுபாலங்கள் **62** இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப் பட்டுள்ளன. சாலை மேம் பாட்டைப் பொறுத்தவரையில் **65.8** கிலோ மீட்டர் தூரத்திற்குக் கப்பிச் சாலையும், **52.7** கிலோ மீட்டர் தூரத்திற்குத் தார் சாலையும்; புதிதாக அமைக்கப் பட்டுள்ளன. கிட்டத்தட்ட பேருந்துகள் செல்லுகின்ற அனைத்துப் பாதைகளும், தார்ச் சாலைகளாகவும், மாற்றி அமைக்கப்பட்டுள்ளன என்ப தையும் ஏற்கெனவே இருந்த சாலைகளில் **269** கிலோ மீட்டர் தூரத்திற்குத் தார்ச் சாலை களாகத் தரம் உயர்த்தப் பட்டுள்ளன என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுவரை 522 ஆதி திராவிடப் பெருமக்களுக்கும் இதர நலிந்த பிரிவினைச் சார்ந்த 30 குடும்பங்களுக்கும் Concrete தளம் அமைந்த தொகுப்பு வீடுகள் கட்டி இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. **206** ஜீவன்தாரா கிணறுகள் **80** இலட்சம் ரூபாய் செலவில் ஆதிதிராவிடப் பெருமக்களுக் காக அமைத்துக் கொடுக்கப் பட்டுள்ளன. 386 ஆழ்குழாய்க் கைப்பம்புகளும், 84 ஆழ்குழாய் மோட்டார் பம்புகளும், இப் பகுதியில் அமைத்துக் கொடுக்கப் பட்டுள்ளன.

இச்சட்டமன்றத் தொகுதிக் குட்பட்ட கிட்டத்தட்ட எல்லாப் பகுதிகளிலுமே பாதுகாக்கப் பட்ட குடிநீர் வழங்கப் பட்டுள்ளது. ஒரு புறம் குடிநீர்ப் பற்றாக்குறை மற்றொரு புறம் கிடைக்கின்ற நீரில் Fluoride அதிகமாக உள்ளதால், ஏற்பட்டு வரும் உடல்நலக் கேடு, இவை இரண்டையும் நீக்குவதற்காகப் புதிய நீர் ஆதாரங்களை ஏற் படுத்தித் தருவதோடு மட்டு மல்லாமல், அவற்றில் Fluoride அளவு உடல் நலத்தைப் பாதிக் காத அளவுக்குக் குறைப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேட்டுப் பகுதிகளில், தண்ணீர் கொண்டு செல்வதற்கு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் கட்டி பாதுகாக்கப் பட்ட குடிநீரை வழங்கி வருகின்றோம். அதுமட்டுமின்றி **25** குடும்பங்களுக்கு ஒரு பொதுக் குழாய் Public Fountain அமைக்கப்பட்டுள்ளது. ஒரு குடிசைக்கு ஒரு விளக்குத் திட்டத்தின் கீழ் பர்கூர் தொகுதியில், **1,331** குடிசை களுக்கு இதுவரை இலவசமாக மின் வசதி வழங்கப்பட்டுள்ளது. பயன்பெறுபவர்களில் கிட்டத் தட்ட 80 சதவிகிதத்தினர் ஆதி திராவிடப் பெருமக்கள் என்பதைச் சுட்டிக்காட்டுவதில் நான் பெருமிதம் அடைகிறேன்.

திருமண உதவித் திட்டம், பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், விதவையின் குழந்தை களுக்குத் திருமண உதவித் திட்டம், கலப்புத் திருமண உதவித் திட்டம், விதவைகள் திருமண திட்டம் இலவச தையல் இயந்திரங்கள் வழங்கும் திட்டம் என்று பல்வேறு நலத் திட்டங்கள், மிக அதிமான அளவில் உங்கள் அன்புச் சகோதரியின் அரசால் இந்த மாவட்டத்திலும், பர்கூர் தொகுதியிலும் செயல்படுத்தப் பட்டுள்ளன.

எங்கள் ஆட்சிக் காலத்தில் தான் முதன் முதலாக மகளிர் விடுதி ஒன்றும் **50** இலட்சம் ரூபாய் செலவில் பர்கூரில் கட்டப்பட்டு வருகிறது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரி வித்துக் கொள்கிறேன். தர்மபுரி மாவட்டத்தில் தர்மபுரியில் ஒரு அனைத்து மகளிர் காவல் நிலையமும், பர்கூரிலும், ஓசூரிலும் அனைத்து மகளிர் காவல் நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. நிரந்தரக் கட்டடங்கள் கட்டித் தருவதற்கு இன்று நான் அடிக்கல் நாட்டியுள்ளேன்.



பர்கூர் சட்டமன்றத் தொகுதிக்குள் அமைந்துள்ள கந்திகுப்பத்தில் TAMIN நிறுவனத்தால் 6 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள கருங்கல் மெருகேற்றும் தொழிற்சாலையையும் 1 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் பர்கூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தையும் திறந்து வைத்ததில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இன்று நேரிடையாகக் குடிநீர் வழங்கப்பட்டாலும் இத் திட்டத்தின் கீழ் தேவைப்படும் நீர்த் தேக்கத் தொட்டிகளும் இதர வசதிகளும் விரைவில் அமைத்துத் தரப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரி வித்துக் கொள்கிறேன்.

கிட்டத்தட்ட 10 ஆண்டுகளாக இம்மாவட்டத்தில் எந்த ஒரு புதிய வட்டமோ வருவாய்க் கோட்டமோ ஏற்படவில்லை. ஆனால், எங்கள் ஆட்சிக் காலத்தில் நிர்வாக நலன் கருதி இரண்டு புதிய வட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. பாப்பி ரெட்டிப்பட்டியும், பர்கூர் சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த போச்சம்பள்ளியும் இன்று புதிய வட்டங்களாக உருவாகி நன்முறையில் செயல்பட்டு வருகின்றன.

TACID நிறுவனத்தின் சார்பில் 1,524 ஏக்கர் நிலப் பரப்பில் போச்சம்பள்ளியில் உருவாக உள்ள ஒரு மாபெரும் தொழிற்பேட்டை Mega Industrial Estate இம்மாவட்டத்தின் ஒட்டு மொத்த தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

இன்று காலை முதல் 16 இடங்களில் நான் தொடங்கி வைத்தும் அடிக்கல் நாட்டியும் வந்துள்ள திட்டங்களின் மொத்த மதிப்பு 5 கோடியே 25 இலட்சம் ரூபாய் ஆகும். இப்பொழுது நான் பர்கூரில் நடைபெறும் இந்த 17வது நிகழ்ச்சியில் 16 கோடி ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள புதிய கட்டடங்கள் முடித்து வைக்கப் பட்ட புதிய திட்டங்கள் ஆகிய வற்றைத் திறந்து வைத்தோடு 17 கோடி ரூபாய் செலவில் புதிய திட்டங்களுக்கு அடிக்கல்லையும் நாட்டியுள்ளேன். மொத்தத் திட்டங்களின் மதிப்பு 33 கோடி ரூபாய் ஆகும்.

தர்மபுரி மாவட்டத்தின் இதரப் பகுதிகளில் 41 கோடி ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்ட கட்டடங்கள் மற்றும் முடித்து வைக்கப்பட்ட திட்டங்கள் ஆகியவற்றைத் திறந்து வைத்தோடு 50 கோடி ரூபாய் மதிப்பில் புதிய திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டியுள்ளேன். மொத்தத் திட்டங்களின் மதிப்பு 91 கோடி ரூபாய் ஆகும். ஆக மொத்தம் இந்த விழாவின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களின் மொத்த மதிப்பு 124 கோடி ரூபாய் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நேரல்குட்டை, ஜெக கொல்லை, கோதி அலகனூர், எம்.ஜி.ஆர். நகர், கொத்தூர், பூமாலை நகர், பர்கூர் ஆகிய பகுதிகளின் குடிநீர்த் தேவையை இத்திட்டம் பூர்த்தி செய்யும். எலத்தகிரி, ஒதிகுப்பம், கெட்டூர் கொட்டகை, மாடத்தனூர் ஆகிய நான்கு இடங்களில் 19 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளையும் ஒரு கோடி ரூபாய் செலவில் மாதே பள்ளியில் அமைக்கப்பட்ட கூட்டுறவுத் தொழிற் பயிற்சிக் கூடத்தையும் பாலி நாயனப் பள்ளியில் ஒரு கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள, IRT பாலிடெக்னிக் கட்டடத்தையும், பர்கூரில் 2 கோடியே 33 இலட்சம் ரூபாய் செலவில் பெண்களுக்கென அமைக்கப்



பட்ட SIDCO தொழிற்பேட்டையையும் இன்று திறந்து வைத்ததில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

பர்கூர் தொகுதியில் பல்வேறு இடங்களில் 25 இலட்சம் ரூபாய் செலவில் அமைந்துள்ள 16 தொடக்கப் பள்ளிக் கட்டடங்கள் அச்சமங்கலத்தில் 66 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட தமிழ்நாட்டுப் பாடநூல் கழகக் கட்டட வளாகம், பர்கூர் சட்டமன்றத் தொகுதியில் பல்வேறு இடங்களில் அமைந்துள்ள மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் 65 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட 58 வகுப்பறைக் கட்டடங்கள், 39 இலட்சம் ரூபாய் செல்வில் 13 புதிய உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிக் கட்டடங்கள், 16 இலட்சம் ரூபாய் செலவில் 11 தொடக்கப் பள்ளிக் கட்டடங்கள், 23 இலட்சம் ரூபாய் செலவில் பர்கூரில் ஒரு விருந்தினர் மாளிகை, உப்பரப் பட்டியில் 8 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட பிற்பட்டோர் நல மாணவர் விடுதி, முதுகாண பள்ளியில் 8 இலட்சம் ரூபாய் செல்வில் கட்டப்பட்ட ஆரம்பச் சுகாதார நிலையக் கட்டடம், பணியாளர் குடியிருப்பு ஆகியவைகளையும் இன்று நான் திறந்து வைத்ததில் என் மனம் மகிழ்ச்சி அடைகின்றது.

3 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் பர்கூர் மற்றும் 29 குடியிருப்புகள் பயன்பெறும் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு இன்று நான் அடிக்கல் நாட்டியுள்ளேன். பர்கூர் அங்கிநாயன பள்ளியில் 91 இலட்சம் ரூபாய் மதிப்பில் அரசு மகளிர் கல்லூரிக் கட்டடத்திற்கு இன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இப் பகுதியின் பெண் கல்வி வளர்ச்சிக்கு இது ஒரு கலங்கரை விளக்கமாகத் திகழும் என்று உறுதியாக நம்புகிறேன்.

ஜின்ஜாம் பட்டியில் 33 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு பாலமும், ஆம்பள்ளியில் 66 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு பாலமும் விரைவில் அப்பகுதி வாழ் மக்களின் கோரிக்கையின் படி கட்டித்தரப்படும். பனகமுட்லு கிராமத்தில் 9 இலட்சம் ரூபாய் மதிப்பிலும், காரகுப்பத்தில் 6 இலட்சம் ரூபாய் செலவிலும் அணைக்கட்டுகள் கட்டித் தரப்படும். பர்கூரில், 22.5 இலட்சம் ரூபாய் செலவில், ஆதிதிராவிடப் பெண்கள், நல விடுதிக் கட்டடத்திற்கும்; 7 இலட்சம் ரூபாய் மதிப்பில் பர்கூர் அனைத்து மகளிர் காவல் நிலைய புதிய கட்டடத்திற்கும், 30 இலட்சம் ரூபாய் செலவில் 16 பள்ளிக் கட்டடங்களுக்கும் இன்று நான் அடிக்கல் நாட்டியுள்ளேன்.

கோட்டைபட்டியிலும், பனகமுட்லுவிலும் பொதுச் சுகாதார மையங்கள் 14 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப் படும். பர்கூர் பொறியியற் கல்லூரி வளாகத்தை 10 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்க இன்று என்னால் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

தர்மபுரி மாவட்டம் ஒசூரில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் 8 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட 1,100 குடியிருப்புகளைத் திறந்து வைத்திலும், 4 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் 107 குடியிருப்புகள் பயன்பெறும் வண்ணம் அமைக்கப்பட்ட கூட்டுக் குடிநீர் திட்டத்தைத் தொடங்கி வைத்ததிலும் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

தர்மபுரி மாவட்டத்தில் கட்டப்பட்ட 1,471 தொகுப்பு வீடுகளையும், 42 ஆரம்பப் பள்ளிக் கூடுதல் கட்டடங்களையும், 50 உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிக் கட்டடங்களையும், 158 ஆரம்பப் பள்ளிக் கட்டடங்களையும், அஸ்தகிரியூர், கோட்டபதி, கல்லு, மருவபாலம், மூலசித்திலிங்கி ஆகிய இடங்களில் கட்டப்பட்ட அணைக் கட்டுகள் மேலும் மாவட்டத்தின் இதரப் பகுதிகளில் கட்டப்பட்ட ஆரம்பச் சுகாதார நிலையங்கள், நீதிமன்ற வளாகம், பாலங்கள், ஆகியவற்றைத் திறந்து வைத்ததில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

கிருஷ்ணகிரி நகராட்சிப் பகுதியில் குடிநீர் வழங்க 3 கோடியே 72 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு புதிய குடிநீர்த் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டிய திலும் ஒசூர் ஏ.ஜெட்டிஹள்ளி, தர்மபுரி ஆகிய இடங்களில் 30 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட உள்ள வீட்டுமனை வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் குடியிருப்புகள் கட்டும் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியதிலும், கிருஷ்ணகிரி, ஒகேனக்கல், நெருப்பூர், பெரும் பாளை, பெண்ணகரம் பெண்ணீஸ்வரமடம் ஆகிய இடங்களில் 8.5 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு மின் வாரியத்தால் மேற்கொள்ளப் பட்டுள்ள துணை மின் நிலையங்கள் போன்ற புதிய மின் வசதிக் கட்டமைப்புகள், ஆதிதிராவிட நலப் பெண்கள் விடுதி, தர்மபுரி மாவட்ட அனைத்து மகளிர் காவல் நிலையம், பாலங்கள் பள்ளிக் கட்டடங்கள், நூலகக் கட்டடங்கள் ஆகியவற்றுக்கு அடிக்கல் நாட்டியதிலும் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

தனி மனிதப் பொருளாதார மேம்பாட்டிற்கு வழி வகுக்க அரசின் நலத்திட்ட உதவிகளை எங்கள் அரசு, ஒரு புதிய முனைப்புடன், செயல்படுத்தி வருகின்றது. வேறெந்த காலத் திலும் இல்லாத அளவிற்கு, அரசின் நலத்திட்ட உதவிகள், பல்லாயிரக்கணக்கான பேருக்கு மாவட்டந்தோறும் வழங்கப்பட்டு வருகின்றது.

இன்று 13 ஊராட்சிகளைச் சேர்ந்த 411 பேருக்கு 1 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட உள்ளன. அனைவருக்கும் எனது கையால், வழங்க வேண்டும் என்று, நான் விரும்பினாலும்; நேரத்தின் அருமையைக் கருதி, ஒரு சிலருக்கு மட்டும் நானே எனது கையால் விழா மேடையில் கொடுக்க உள்ளேன். மற்றவர்களுக்கு, அரசு அலு வலர்கள், உதவிகளை இன்றே, இங்கேயே வழங்குவார்கள். இன்று, அரசின் நலத்திட்ட உதவிகளைப் பெறுபவர்கள், அவற்றை ஒரு ஆதாரமாகக் கொண்டு; நன்முறையில் பயன்படுத்தி; வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்று நெஞ்சார வாழ்த்துகிறேன்.

இப்பகுதி வாழ் மக்களின் நலன் காக்கவும்: எல்லா அடிப்படை வசதிகளையும் பெற்றுத் தரவும்: எல்லா வளர்ச்சித் திட்டங்களையும், உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, ஒரு புதிய முனைப்புடன், தொடர்ந்து செயல்படுத்தும் என்று, உறுதி கூறுகிறேன்.

# இரண்டாம் நாள் நிகழ்ச்சி

**மா**ண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 12.1.1996 அன்று பர்கூர் சட்டமன்றத் தொகுதி யைச் சேர்ந்த 14 இடங்களிலும், காவிரிப்பட்டினம் சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த ஒரு இடத்திலும் ஆக மொத்தம் 15 இடங்களில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

**அஞ்சூர்**

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் காலை 10 மணிக்குக் கிருஷ்ணகிரியிலிருந்து புறப்பட்டு மாலை 5 மணிக்கு போச்சம்பள்ளியில் நடைபெற்ற அரசு விழாவில் கலந்து கொண்டு முடித்து வைக்கப்பட்ட திட்டங்களைத் தொடங்கி வைத்தும் புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும் சிறப்புரையாற்றினார். கிட்டத்தட்ட 8 மணி நேரம் அயராது சுற்றுப் பயணத்தை இரண்டாம் நாள் பர்கூரில் மேற்கொண்டார் என்பது குறிப் பிடத்தக்கதாகும்.

**கொடமாண்டப்பட்டி**

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் முதல்வ ராகப் பதவியேற்ற பிறகு, கொட மாண்டப்பட்டி மற்றும் சுற்றுப் பகுதியில் 28 இலட்சம் ரூபாய் செலவில் பல புதிய வசதிகள் ஏற்படுத்தித் தரப் பட்டுள்ளன. அவற்றுள் 15 இலட்சம் ரூபாய் செலவில் 3 மேல்நிலை நீர்த்தேக் கத் தொட்டிகள், இரண்டரை இலட்சம் ரூபாய் செலவில் 10 ஆழ்குழாய்க் கைப்பம்புகள், 77 ஆயிரம் ரூபாய் செலவில் சத்துணவுக்கூடக் கட்டடம், இரண்டரை இலட்சம் ரூபாய் செலவில் தொலைக்காட்சி அறை, வெள்ளத் தடுப்புச் சுவர், சமையலறைக் கட்டடம் ஆகியவை கட்டித் தரப்பட்டுள்ளன. ஒருங் கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 304 பேருக்கு 5 இலட்சம் ரூபாய் கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

**தொடர்ச்சி 35-ஆம் பக்கம் பார்க்க**

# காவிரி நதி நீர்ப் பிரச்சினை:

## அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை

தமிழகத்தின் உயிர்மூச்சுப் பிரச்சினையான, காவிரி நதி நீர்ப் பிரச்சினை குறித்தும் காவிரி டெல்டாப் பகுதியில் 13.3 இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் பாசன நீர் இன்றி, வாடிக் கொண்டிருக்கும் நெற்பயிரைக் காப்பாற்றுவதற்கும் 28.12.1995 அன்று உச்சநீதி மன்றத்தின் ஆணையைத் தொடர்ந்து நாம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விவாதிக்க இந்த அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டியுள்ளேன். இந்தக் கூட்டத்தில் பங்கு கொள்ள வந்துள்ள உங்கள் அனைவரையும் நான் வரவேற்கிறேன்.

**உச்சநீதிமன்றம் பிரதமருக்கு ஆணை**

காவிரி டெல்டாப் பகுதியில், 13.3 இலட்சம் ஏக்கர் நிலப் பரப்பில் பயிரிடப்பட்டுள்ள நெற்பயிரை, வாடிவிடாமல் பாதுகாப்பதற்கு உச்சநீதி மன்றத்தின் கருத்திற்கு இணங்க 19.12.95 அன்று, காவிரி நதி நீர் நடுவர் மன்றம் விசாரித்து, 11 டி.எம்.சி அடி காவிரி நீரை, கர்நாடக மாநிலம் உடனடியாகத் தமிழகத்திற்கு வந்து சேரும் வண்ணம் திறந்துவிட வேண்டும் என்று தீர்ப்பு வழங்கியது. இது நாள் வரை அந்த ஆணை அமல்படுத்தப்படாததால், உச்ச நீதி மன்றத்தில் அந்தத் தீர்ப்பை அமல் நடத்த, நாம் தாக்கல் செய்த மனுவினை விசாரித்து உச்சநீதிமன்றம், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் இரண்டு மாநிலங்களின் முதலமைச்சர்களையும், காவிரிப் படுகையைச் சேர்ந்த நாடாளு மன்ற உறுப்பினர்களையும், சட்டமன்றக் கட்சித் தலைவர்களையும் சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவர்களையும் அழைத்து, கூட்டம் நடத்தி, இன்னும் இரண்டு நாட்களில் காவிரி நதி நீர் நடுவர் மன்றம் 19.12.95 அன்று வழங்கிய தீர்ப்பினைச் செயல்படுத்த, தண்ணீர் திறந்துவிடத் தேவையான தீர்வை ஒருமித்த கருத்தை உருவாக்கியோ அல்லது அவரே அத்தகைய முடிவை மேற்கொண்டோ, மேட்டூர் பாசனப் பகுதியிலுள்ள நெற்பயிரைக் காப்பாற்ற வேண்டும் என்று ஆணை பிறப்பித்துள்ளது. அதைத் தொடர்ந்து எழுந்துள்ள சூழ்நிலைகளை விவாதிப்பதற்கும் இது குறித்து, உங்களுடைய மேலான கருத்துக்களையும், ஆலோசனைகளையும் கேட்பதற்கும், இந்தக் கூட்டம் இன்று கூட்டப்பட்டுள்ளது.

**250 டி.எம்.சி தண்ணீர் விடவேண்டும்**

காவிர் நதி நீர் நடுவர் மன்றம், 25.6.1991 அன்று பிறப்பித்த, இடைக்கால நிவாரண ஆணையில், கர்நாடக அரசு பாசன ஆண்டு ஒன்றுக்கு 250 டி.எம்.சி அடி நீரை, மேட்டூர் நீர்த் தேக்கத்திற்கு வந்து சேரும்படி தனது நீர்த் தேக்கங்களிலிருந்து திறந்துவிட வேண்டும் என்றும் மாத வாரியாக நீரின் அளவையும் குறிப்பிட்டு ஒவ்வொரு மாதத்தின் அளவை, 4 சமப் பங்குகளாக்கி, வாராந்திர அடிப்படையில் நீரை வழங்கி வர வேண்டும் என்றும் ஒரு வாரத்தின் குறிப்பிட்ட அளவில் குறைபாடு ஏற்பட்டால் அதை அந்த மாதத்தின் இறுதி வாரத்தில் எப்படியேனும் ஈடுகட்ட வேண்டும் என்றும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது.

அதுமட்டுமின்றி, கர்நாடகாவில், 1972-ஆம் ஆண்டு 6.83 இலட்சம்

ஏக்கராக இருந்த பாசனம், 1990-ஆம் ஆண்டு, 11.2 இலட்சம் ஏக்கராக உயர்ந்திருந்ததை, அம்மாநிலத்தின் சார்பில் கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்களின் அடிப்படையிலே கண்டறிந்து கர்நாடக மாநிலம் தனது பாசனப் பரப்பை விரிவுபடுத்துவதைத் தடை செய்து, கர்நாடக மாநிலம், காவிரிப் படுகையில் தற்போது பாசனம் செய்து வரும் 11.2 இலட்சம் ஏக்கருக்கு மேல், இந்த இடைக் காலத்தில் பாசன விரிவாக்கம் செய்யக்கூடாது என்றும் ஆணையிட்டுள்ளது.

## இடைக்கால ஆணை ஏற்க மறுப்பு

காவிர் நதி நீர் நடுவர் மன்றம், காவிரி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினைக்கு இறுதித் தீர்ப்பு அளிக்கும் வரை இந்த இடைக்கால ஆணை 1991-ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் அமலுக்கு வந்தது. காவிரிநதி நீர் நடுவர் மன்றம், நாடாளு மன்றத்தில் இயற்றப்பட்ட சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பாக இருந்தும், இரண்டு மாநிலங்களின் கருத்துக்களையும், முகாந்திரங் களையும் அவர்கள் அளித்த குறிப்புகளையும் புள்ளி விவரங்களையும் பெற்று, பின்பு வழக்கறிஞர்களின் விவாதங் களையும் கேட்டறிந்த பின்பு, இந்த இடைக்கால ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தாலும், கர் நாடக மாநிலம், இந்த இடைக் கால ஆணையை ஏற்றுக் கொள்ள மறுத்தபோது, 22.7.1991 அன்று அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டி அது குறித்து நாம் விவாதித்தோம்.

## அனைத்துக் கட்சிக் குழு

தமிழகத்தின் உயிர் மூச்சுப் பிரச்சினையான காவிரி நதி நீர்ப் பிரச்சினையில் அனைத்துக் கட்சிகளும் அளித்த ஆதரவும், அவர்கள் வழங்கிய நல்ல கருத்துக்கள் மற்றும் ஆலோ சனைகளின் அடிப்படையிலும் அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களின் குழு ஒன்றுக்கு நான் தலைமையேற்று டெல்லிக்குச் சென்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களைச் சந்தித்து நமது தரப்பு நியாயங்களை விவாதித்தப் பின்னர் தான், இந்த 1991-ஆம் ஆண்டின் இடைக்கால ஆணையை மத்திய அரசு தனது அரசிதழில் 19.12.1991-ஆம் தேதியன்று பிரசுரித்தது.

பின்னர், 1993-ஆம் ஆண்டு இதே போன்றதொரு இக் கட்டான சூழ்நிலை ஏற்பட்ட போது, நான் உண்ணாவிரதம் மேற்கொண்டேன். அதைத் தொடர்ந்து காவிரி நதி நீர் நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை அமல்படுத்துவதைக் கண்காணிக்க ஒரு கண் காணிப்புக் குழுவும் அதாவது Monitoring Committeeயும், செயலாக்கும் குழுவும் அதாவது Implementation Committee அமைக்கப்படும் என்று மத்திய அரசு ஒப்புக் கொண்டது. ஆனால், அந்தக் குழுக்கள் இன்று வரை அமைக்கப்படவில்லை.

கடந்த 4 ஆண்டுகளாகத் தமிழகத்திற்குரிய காவிரி நீரை இடைக்கால ஆணையின்படி, கர்நாடக மாநிலம், காவிரியில் திறந்து விடாவிட்டாலும், இயற்கை அன்னையின் பூரண அருள் நமக்குக் கிடைத்திருந்த காரணத்தினால், நமது வேளாண்மை பாதிக்கப்பட வில்லை.

## பயிர்கள் பாதிப்பு

மேலும், புதிய வேளாண்மை உத்திகளை, நாம் கடைப்பிடித்து நமது இலக்கான 100 இலட்சம் டன் உணவுப் பொருள் உற்பத்தியை, எட்டிப் பிடித் தோம். ஆனால், இந்த ஆண்டு, தென்மேற்குப் பருவ காலத்தில், நமக்குக் கிடைக்கவேண்டிய காவிரி நீரைக்கர்நாடக மாநிலம் திறந்துவிடாத காரணத்தினா லும், நமது எதிர்பார்ப்புகளுக்கு மாறாக வடகிழக்குப் பருவ மழை பொய்த்துவிட்ட காரணத்தினாலும் காவிரி டெல்டாப் பகுதியில் 13.3 இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டுள்ள நெற்பயிர் பாசன வசதியின்றி வாடி விடுகின்ற ஒரு இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த ஆண்டு ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் நமக்குக் கிடைக்கவேண்டிய நீரின் அளவைவிட, கர்நாடக மாநிலம் நமக்கு வழங்கிய நீரின் அளவு

**(29.12.95 அன்று தலைமைச் செயலகத்தில் நடந்த அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத் தில் ஆற்றிய உரையிலிருந்து)**

குறைவாக இருந்ததால், 1.8.1995 அன்று உச்சநீதி மன்றத்தின், இடைக்கால மனு Interlocutory Application ஒன்றைத் தாக்கல் செய்தோம்.

**நமது கோரிக்கைகள்**

அதில் நாம் கேட்ட கோரிக்கைகள் இரண்டு:

1. நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையின்படி மாதா மாதம் கர்நாடக மாநிலத்திலிருந்து தமிழகத்திற்கு வந்து சேர வேண்டிய காவிரி நீரை; விடுதலின்றித் திறந்து விட வேண்டும்.

2. தமிழகத்திற்குரிய பாசன நீரை முழுமையாக வழங்கிய பின்னரே கர்நாடக மாநிலம், தனது நீர்த் தேக்கங்களில் நீரைத் தேக்கி வைத்துக் கொள்ள அனுமதிக்க வேண்டும்.

இந்த ஆண்டு, இடைக்கால ஆணைப்படி நமக்குக் கிடைக்கப் பெறாத, நீரின் அளவுக் குறைவைச் சுட்டிக் காட்டி கர்நாடக மாநிலம் தொடர்ந்து நடுவர் மன்ற ஆணையைப், புறக்கணித்து வருவதையும் எடுத்துரைத்து நடப்பு ஆண்டிற்கான எல்லாப் புள்ளி விவரங்களையும் அளித்து ஏற்கெனவே, 14.3.1995 அன்று தாக்கல் செய்திருந்த தாவா மனுவுடன் அவற்றை இணைத்துக் கொள்ளுமாறு 1.10.95 அன்று தமிழக அரசு மேலும் ஒரு மனுவைத் தாக்கல் செய்தது அதை உச்சநீதி மன்றமும் அனுதித்தது. அதன் படி அந்த தாவா மனுவில் சேர்த்து, முழுமை பெறச் செய்தது.

**நல்ல கொள்கைகள்**

கொள்கைகள் நல்லவையாக இருந்தால் எந்தப் பின்னணியும் அதற்கு உதவும்.

*—சுவாமி சின்மயானந்தர்*

**அவசர மனு தாக்கல்**

இந்த முயற்சிகளினால், நமக்குத் தேவையான நிவாரணம் கிடைக்காததாலும், காவிரி நதி நீர் நடுவர் மன்றத்திற்குத் தனது ஆணையைச் செயல்படுத்துகின்ற அதிகாரம் Powertoexecute இல்லை என்று சட்ட நிபுணர்கள் கருத்துத் தெரிவித்ததாலும், தற்போது காவிரி டெல்டாப் பகுதியில், பாசன வசதி இன்றி வாடும் நெற்பயிரைக் காப்பாற்றுவதற்குத் தேவையான குறைந்த பட்ச நீரான 30 டி.எம்.சி. அடி நீரையாவது உடனடியாகத் திறந்துவிட வேண்டும் என்று கோரி, EmergentPetition அதாவது அவசர மனு ஒன்று 11.12.1995 அன்று தமிழக அரசின் சார்பில், உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

உச்சநீதிமன்றம், தமிழகத்தின் படுகைப் பகுதியில் நிலவி வருகின்ற, பாசன நீர்ப் பிரச்சினை குறித்து, தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்து; இதுகுறித்து, காவிரி நதி நீர் நடுவர் மன்றம், இரு தரப்பினரையும் விசாரித்து, தகுந்த நிவாரணம் வழங்க வேண்டும் என்று 14.12.1995 அன்று ஆணையிட்டது. உச்ச நீதி மன்றத்தின் கருத்திற்கிணங்க, நடுவர் மன்றம் இரு தரப்பிலிருந்தும் நிபுணர்களின் புள்ளி விவரங்களைப் பெற்று அவற்றை ஆராய்ந்தது. நமது மாநிலம் முழு விவரங்களையும் தயங்காமல் அளித்தது.

ஆனால், கர்நாடக மாநிலம், அவர்கள் பாசன வசதிக்குப் பயன்படுத்துகின்ற நீரின் அளவையும் அங்குள்ள பயிரின் நிலைகளையும் நடுவர் மன்றத்திற்குக் கொடுக்கத் தவறியது. கர்நாடக மாநிலத்தின் தென் மேற்குப் பருவ மழையின் தொடக்கத்தில் வறண்ட நிலையில் நீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டது என்றும், எனவே இந்த ஆண்டை வறட்சி ஆண்டாகக் கருத வேண்டும் என்றும் உண்மைக்குப் புறம்பாக, கர்நாடக மாநிலம் முன் வைத்த வாதத்தை, நடுவர் மன்றம் ஏற்க இயலாது என்று கருத்துத் தெரிவித்துள்ளது.

கர்நாடக மாநிலம் ஒட்டு மொத்தத்தில் பகுதி அளவுத் தண்ணீரை அதாவது Pro rata basisஇல் மட்டுமே வழங்க வேண்டும் என்ற வாதத்தையும், நடுவர் மன்றம் அப்படியே ஏற்றுக் கொள்ளவில்லை. நம்மைப் பொறுத்த வரையில், எந்த விகிதாசாரத்தில், நீரைப் பங்கீடு செய்வது என்பதைக் கர்நாடக அரசே தன்னிச்சையாகத் தீர்மானிக்கக் கூடாது என்றும், அதற்குரிய அதிகாரம், நடுவர் மன்றத்திற்கு மட்டும்தான் உண்டு என்றும் வாதாடினோம்.

**கர்நாடக அரசின் மனு தள்ளுபடி**

எனவே, காவிரி நதி நீர் நடுவர் மன்றம் நமது கருத்தை முழுமையாக ஏற்றுக் கொண்டு, கர்நாடக அரசின் வாதத்தைத் தள்ளுபடி செய்தது. இருப்பினும், கர்நாடக மாநிலம் கொடுத்த இந்த ஆண்டு நீர்வரத்து, புள்ளி விவரங்களின் அடிப்படையிலே கூட அவர்கள், தமிழ்நாட்டிற்கு உரிய நீரின் அளவில், 28 டி.எம்.சி அடி நீரைக் குறைவாகக் கொடுத்துள்ளனர் என்றும் அந்தக் குறைபாட்டை ஈடுசெய்ய, கர்நாடக மாநிலத்தின் வாதத்தின் படியே, Pro rata basisஇன் அடிப்படையில் 17 டி.எம்.சி அடி நீரைக் கழித்துக் கொண்டாலும், 11 டி.எம்.சி அடி நீரை அவர்கள் உடனடியாகத் தமிழகத்திற்குக் கொடுக்க வேண்டும் என்றும் 19.12.1995 அன்று நடுவர் மன்றம் தீர்ப்பு வழங்கியது.

அதுமட்டுமின்றி, 1991-ஆம் ஆண்டின் நடுவர் மன்ற இடைக்கால ஆணையின்படி, மீதமுள்ள மாதங்களுக்குரிய நீரைத்தமிழகத்திற்குக்குறைவின்றி வழங்க வேண்டும் என்றும் இந்தத் தீர்ப்பில் கூறப் பட்டுள்ளது.

**கடிதம்**

தமிழ்நாட்டில் வட கிழக்குப் பருவ மழை பொய்த்து விட்டதால் மேட்டூரிலிருந்து திறந்து விடப்படும் தண்ணீரைக் கொண்டு மட்டுமே பயிரிடப் பட்ட நெற்பயிரைப் பாதுகாத்து அறுவடைக்குக் கொண்டு வர இயலாது என்பதை உணர்ந்த வுடன் கர்நாடக மாநிலம் தன்னுடைய நீர்த் தேக்கங்களில் போதுமான அளவு நீரை வைத்துள்ளது என்பதைச் சுட்டிக்காட்டி, 30 டி.எம்.சி. அடி நீரை உடனடியாகத் திறந்து விடுமாறு, நான் 7.12.1995 அன்றே கர்நாடக மாநில முதலமைச்சருக்குக் கடிதம் எழுதினேன். 11.12.1995 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கும் கடிதம் எழுதி இதில் அவர் உடடினயாகத் தலையிட்டு 30 டி.எம்.சி. அடி தண்ணீரைத் திறந்துவிட கர்நாடக மாநில முதலமைச்சரை அறிவுறுத்துமாறும் வற்புறுத் தினேன்.

---

**உண்மையான ஞானம்**

**அ**கங்காரத்தின் வேரை அறுத்து, அதை எரித்துச் சாம்ப லாக்குவதுதான் உண்மையான ஞானத்தின் இயல்பு.

**—ஆதிசங்கரர்**

---

**பிரதமரைச் சந்தித்தேன்**

பின்னர் 14.12.1995 அன்று உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை அறிந்தவுடன், நான் டெல்லிக்குச் சென்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை நேரில் சந்தித்து, 30 டி.எம்.சி. அடி நீரைத் தமிழகத் திற்கு உடனடியாகக் கொடுக்க வில்லை என்றால் கிட்டத்தட்ட 800 கோடி ரூபாய் பெறுமான முள்ள விவசாய விளை பொருள்களின் உற்பத்தி பாதிக்கப்படும் என்பதையும், இலட்சக்கணக்கான விவசாயி களும், விவசாயத் தொழிலாளர் களும், பாதிக்கப்படுவார்கள் என்பதையும் எடுத்துரைத்து அப்பகுதியில் வறட்சி ஏற்பட்டு இலட்சக்கணக்கான மக்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்ற நியாயமான அச்சத்தையும் எடுத்துரைத்தேன். மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களும், நீரைத் திறந்துவிட ஆவன செய்வதாக என்னிடம் கூறினார்கள்.

உச்சநீதிமன்றத்தின் கருத்துப் படி, கர்நாடக மாநில முதலமைச்சர் அவர்களை, நான் 15.12.1995 அன்று தொலைபேசி யில் தொடர்பு கொண்டு, பேசுவதற்கு மேற்கொண்ட முயற்சிகள் பயனளிக்காமல் போயின. இதற்கிடையில் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள், டெல்லியில் ஒரு கூட்டத்தைக் கூட்டினால் மட்டுமே, அதில் தான் கலந்து கொள்வதாக மாண்புமிகு கர்நாடக மாநில முதலமைச்சர் அவர்கள் கருத்துத் தெரிவித்த தாக செய்தி வெளிவந்ததைத் தொடர்ந்து 18.12.1995 அன்று சென்னைக்கு வந்திருந்த மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம் அத்தகையதொரு கூட்டத்தை உடனே மாண்புமிகு பாரதப் பிரதமர் கூட்ட வேண்டும் என்று நானும் கேட்டுக்கொண்டேன்.

19.12.1995 அன்று நடுவர் மன்றத் தீர்ப்பு கிடைத்தவுடன் உடனடியாக 11 டி.எம்.சி. அடி நீரையும், டிசம்பர் மாதத்திற்

குரிய **6.194** டி.எம்.சி. அடி நீரையும், **1996**-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்குரிய, **2.51** டி.எம்.சி. அடி நீரையும் சேர்த்து ஆகமொத்தம், 20 டி.எம்.சி. அடி நீரை, தமிழகத்தின் நலனைக் கருத்தில்கொண்டு, உடனடியாக வழங்கவேண்டும் என்றும் **20.12.1995** அன்றே, கர்நாடக மாநில முதலமைச்சர் அவர் களுக்கு மேலும் ஒரு கடிதம் எழுதினேன். கர்நாடக மாநில முதலமைச்சர் அவர்களுக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் நகலை மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு அனுப்பி வைத்து நடுவர் மன்ற தீர்ப்பை உடனடியாகச் செயல்படுத்த கர்நாடக மாநில அரசை மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் வற்புறுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டேன்.

### தீர்மானம்

தொடர்ந்து கர்நாடக மாநிலம் தனது நிலையில் எந்த மாற்றத்தையும் வெளிப்படுத்தாத காரணத்தினாலும், காவிரி டெல்டாப் பகுதியில் பயிர்கள் மேலும் வாடுகின்ற சூழ்நிலை ஏற்பட்டதாலும், நமக்கு நியாயம் கிடைக்கவேண்டும் என்பதாலும், தமிழகச் சட்டமன்றக் கூட்டத்தை **28.12.1995** அன்று கூட்டி, 20 டி.எம்.சி. அடி நீரை உடனடியாகக் கர்நாடகம் திறந்துவிட வேண்டும் என்ற தீர்மானத்தை ஒரு மனதாக நிறைவேற்றி. மத்திய அரசுக்கு அனுப்பி வைத் துள்ளோம்.

**19.12.1995** அன்று காவிரி நதி நீர் நடுவர் மன்றம் பிறப்பித்த தீர்ப்பை, உடனடியாக அமல் படுத்தக் கோரி நாம் தாக்கல் செய்த மனுவை **28.12.1995** அன்று உச்சநீதி மன்றத்தின் பென்ச் விசாரித்து ஆணை வழங்கியுள்ளது. இடைக்கால நடுவர் மன்றத் தீர்ப்பை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது குறித்து மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் இரண்டு மாநிலங்களின் முதலமைச்சர் களையும், அந்த மாநிலங்களின் படுகைப் பகுதிகளின் நாடாளு மன்ற உறுப்பினர்களையும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர்களையும், சட்டமன்றக் கட்சித் தலைவர்களையும் அழைத்துக் கூட்டம் நடத்தி இரண்டு நாட்களுக்குள் தீர்வு காண வேண்டும் என்றும் பாசன நீரின்றி வாடி வரும் பயிரைக் காப்பாற்ற தண்ணீர் உடனடி யாக விடுவதற்கு ஒருமித்த கருத்தினை உருவாக்கியோ அல்லது மாண்புமிகு பாரதப் பிரதமரே ஒரு முடிவை எடுத்தோ இதற்கான வழி வகை காண வேண்டும் என்றும் இதில் கூறப்பட்டுள்ளது.

### ஆலோசனைகள்

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் கூட்டுகின்ற கூட்டத் தில் கலந்து கொள்வதற்கு முன்பு, இந்தப் பிரச்சினை குறித்து நாம் மேற்கொள்ள வேண்டிய முடிவுகள் குறித்தும், எடுக்க வேண்டிய நடவடிக் கைகள் குறித்தும், உங்களது மேலான கருத்துக்களையும், ஆலோசனைகளையும் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தியத் துணைக் கண்டத்தில் ஒருமைப்பாட்டு உணர்விற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகத் தமிழகம் விளங்கி வருகின்றது. ஆனால், அதே நேரத்தில், இன்னொரு அண்டை மாநிலம் நமது மாநிலத்தில் ஏற்பட்டுள்ள இக்கட்டான சூழ் நிலையைச் சற்றும் மதிக்காமல், தர்மத்தின் அடிப்படையிலே கூட நமக்குப் பாசன நீரை விட மறுத்திருப்பது வேதனைக்குரிய விஷயமாகும். இரண்டு மாநிலங்களுக்கு இடையே இது போன்ற பிரச்சினைகள் ஏற்படும்போது, நான் சட்ட மன்றப் பேரவையில் நேற்று குறிப்பிட்டதைப் போல உடனடியாகத்தலையிட்டுத்தீர்க்க வேண்டிய கட்டாயமும், அவசியமும் மத்திய அரசுக்கு உள்ளது.

தமிழகத்தின் பொருளாதாரம் பாதிக்கப்படாமலும், தமிழகத் தின் ஜீவாதார உரிமைகள், பறிக்கப்படாமலும் நல்லதொரு முடிவை, மத்திய அரசு எடுக்க வேண்டும். அத்தகைய நல்ல முடிவைப் பெற நாம் அனைவரும் ஓரணியில் ஒற்றுமையாகத் திரண்டு நிற்க வேண்டும் என்றும் நீங்கள் அனைவரும் உங்களது முழு ஒத்துழைப்பை எனக்கும், தமிழக அரசுக்கும் நல்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இப்பிரச்சினை குறித்து உங்களது மேலான ஆலோசனை களையும், கருத்துக்களையும் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

# அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தீர்மானம்

**கா**விரி நதி நீர்ப் பிரச்சினை குறித்து எழுந்துள்ள இந்தச் சிக்கல்கள் குறித்து விவாதிப்பதற்காகத் தமிழக அரசு 29.12.95 அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி இருந்தது. கூட்டத்துக்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெஜெயலலிதா அவர்கள் தலைமை தாங்கினார்.

### அனைத்துக் கட்சிகள்

இந்தக் கூட்டத்தில் அஇஅதிமுக, தி.மு.க., இ.காங்கிரஸ், ஜனதா தளம், இ.கம்யூனிஸ்டு, வ.கம்யூனிஸ்டு, ம.தி.மு.க. மற்றும் விவசாயச் சங்கப் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர். சென்னைக் கோட்டையில் உள்ள 10 மாடிக் கட்டடத்தில் சுமார் 4 மணி நேரம் இந்தக் கூட்டம் நடந்தது. கூட்டத்தில் முக்கியப் பிரதிநிதிகள் அடங்கிய குழு டெல்லி செல்வது என்று முடிவு செய்யப்பட்டது.

இது சம்பந்தமாகக் கீழ்க் கண்ட தீர்மானங்கள் நிறைவேறின:

### திறந்து விடுங்கள் !

தமிழகத்தின் டெல்டாப் பகுதியில் 13.3 இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டு வாடிவிடும் நிலையில் உள்ள நெற்பயிரை, உடனடியாகக் காப்பாற்றுவதற்கு 19.12.1995 அன்று காவிரி நதிநீர் நடுவர் மன்றம், வழங்கிய தீர்ப்புப்படி கர்நாடக மாநிலம், உடனடியாகத் தமிழகத்திற்கு வந்து சேரும் வண்ணம், 11 டி.எம்.சி. தண்ணீரையும், டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களுக்குரிய 8.7 டி.எம்.சி. தண்ணீரையும் சேர்த்து 19.7 டி.எம்.சி. அடி காவிரி தண்ணீரைத் திறந்து விட வேண்டும் என்று உச்சநீதி மன்றம் வழங்கிய ஆணையின் அடிப்படையிலும், தமிழகத்திற்கு உடனடியாகக் காவிரி தண்ணீர் வழங்க வேண்டுமென்றும் கர்நாடக மாநிலத்தை வற்புறுத்துகிறது.

### ஒப்புதல்

உச்சநீதிமன்றத்தின் ஆணையின்படி, தமிழகத்திலுள்ள நெற்பயிரைக் காப்பாற்ற வேண்டும் என்றும் 800 கோடி ரூபாய் மதிப்புள்ள, விவசாய விளைபொருள்கள் உற்பத்தி பாதிக்கப்படும் என்பதையும், இலட்சக்கணக்கான விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும் பாதிக்கப்படுவார்கள் என்பதையும் கருத்தில் கொண்டு பாரதப் பிரதமர் தார்மீக உணர்வுகளின் அடிப்படையிலும், மனிதாபிமானத்தின் அடிப்படையிலும் கர்நாடக மாநிலத்தை வற்புறுத்தி கர்நாடக மாநிலம் உடனடியாக 20 டி.எம்.சி. அடி தண்ணீரைத் தமிழகத்திற்குத் திறந்து விட வேண்டும் என்றும், எதிர்வரும் எஞ்சியுள்ள மாதங்களுக்கும், இனிவரும் காலங்களுக்கும் 1991-ஆம் ஆண்டின் நடுவர் நீதிமன்றத்தின் இடைக்கால ஆணையை மதித்து அந்த ஆணையின்படி தமிழகத்திற்குரிய பங்கு நீரை எந்தவிதமான குறைவும் இன்றி, அந்தந்தக் கால கட்டங்களிலேயே திறந்து விட வேண்டும் என்றும், வற்புறுத்துகிறோம். மேலும், இதற்குக் கர்நாடக அரசிடமிருந்து பாரதப் பிரதமர் நரசிம்மராவ் ஒரு ஒப்புதலையும் பெற்றுத்தர வேண்டும் என்று இந்தக் கூட்டத்தில் கேட்டுக் கொள்கிறோம்.


மாண்புமிகு பாரதப் பிரதமர் நாடாளு மன்றக் கூட்டத் தொடரை உடனடியாகக் கூட்டி, காவிரி நதிநீர் நடுவர் மன்றத்திற்குத் தனது ஆணைகளையும், தீர்ப்புக்களையும் சுயமாக நடைமுறைப் படுத்தும் அதிகாரத்தை வழங்குவதற்கு, மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர்த் தாவாக்கள் சட்டத்திற்குத் தகுந்த சட்டத் திருத்தங்களைக் கொண்டு வரவோ அல்லது அதற்காக ஒரு அவசரச் சட்டத்தை உடனடியாகப்பிறப்பிக்கவோ வேண்டும் என்று வற்புறுத்துகிறது.

### முழு ஆதரவு

1993-ஆம் ஆண்டு காவிர் நீர்ப் பிரச்சினை குறித்து இடைக்கால

ஆணையை நடைமுறைப்படுத்துமாறு தமிழக முதலமைச்சர் அவர்கள் உண்ணாவிரதம் மேற்கொண்ட போது, மத்திய அரசு உறுதி அளித்தது இதுவரை அமைக்கத் தவறிய கண்காணிப்புக்குழு மற்றும் நடைமுறைப்படுத்தும் குழு ஆகியவற்றை உடனடியாக மத்திய அரசு ஏற்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு பாரதப் பிரதமரை வற்புறுத்துகிறது.

மாண்புமிகு பாரதப் பிரதமர் டெல்லியில் இதுகுறித்துக் கூட்டுகின்ற அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் கலந்து கொள்ள ஒரு குழுவைத் தலைமையேற்று நடத்திச் செல்லும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தின் நலனைக் கருத்தில் கொண்டும், விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டும் காவிரி நதி நீர் நடுவர் மன்றம் 19.12.1995 அன்று வழங்கிய தீர்ப்பினை அமல்படுத்த அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்ற அதிகாரத்தை வழங்கி அவ்வாறு எடுக்கும் எல்லா முடிவுகளுக்கும் இக்கூட்டம் முழு ஆதரவு அளிப்பதோடு, தங்களது ஒத்துழைப்பையும் முழு மனதுடன் தருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறது.



## தமிழர் திருநாள்!

பொங்கல் உழவர் விழா! தமிழர் திருநாள்! நம்பவொண்ணாப் புராணக் கருத்தினை நாட்டினர் மனதிலே மூட்டிடும் மற்றைய விழாக்கள் போலன்றி, உழைப்பின் பெருமையை உலகுக்கு உணர்த்தும் உன்னதமான விழா!

களத்திலே காணப்பட்ட பலன், வீட்டிலே புதுப்பானையிலே, பொங்கி வழியும் நாள் பொங்கல் விழா!

செந்நெல்லும் செங்கரும்பும் பச்சைக் காய்கறியும் பசும் பொன்னிறப் பண்டங்களும் வண்ணக் கோலமும், வாடா மலர்களும், மனைதோறும் குவிக்க, மக்கள் மனதிலே மகிழ்ச்சியூட்டும் நன்னாள்! மார்பிலே சந்தனம் மணக்கும் பொன்னாள்! கூந்தலிலே மலர்கள் மொய்க்கும் நாள்!

ஆடல், பாடல், கொட்டு முழக்கு, குதூகலம் வந்தாடும் நாள்!

பாடுபட்ட உழவன் தன் வீட்டுப் பானையில், தான் உழைத்ததில் சிறிதளவு பலனாவது சேர்வதைக் காணும் நாள்!

–பேரறிஞர் அண்ணா

# டில்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதல்வரின் முழக்கம்

**கா**விரி தண்ணீர் தகராறு பிரச்சினைகளில் தமிழ்நாட்டின் நிலையைப் பிரதிபலிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் அடங்கிய பிரதி நிதிகள் குழுவுடன் இங்கே வந்திருக்கிறேன்.

இப்போதைய பிரச்சினை தேசிய அளவில் விவாதிக்கக் கூடிய அளவுக்கு வளர்ந்துவிட்டது.

குறைந்த அளவான 11 டிஎம்.சி. தண்ணீரைக் காவிரியில் திறந்துவிட கர்நாடக அரசு மறுப்பதால் 13 இலட்சம் ஏக்கர் நெற்பயிர் வாடும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

டிசம்பர், ஜனவரி மாதங்களில் விடவேண்டிய தண்ணீர் அளவான 8.70 டி.எம்.சி. அடி தண்ணீருக்கு இந்த அளவு கூடுதலாகும்.

ஆனால், கர்நாடக அரசு பிடிவாதமாக உள்ளது. இதனால் காவிரி வடிநிலப் பகுதிகளில் உணவு உற்பத்தி இழப்பு ஏற்பட்டு விவசாயிகள் மத்தியில் துயர நிலை உருவாகி இது தேசிய அளவில் ஒரு சேதமாக உருவெடுத்துவிடும்.

காவிரி தண்ணீர்த் தகராறு பற்றிய பிரச்சினையில் நடுவர் மன்றத் தீர்ப்புக்கு, கர்நாடக அரசு கட்டுப்படாது என்று கூறுவது கவலை அளிப்பதாக இருக்கிறது.

அதேபோல எங்களது கோரிக்கைகளுக்கும் மத்திய அரசு உடனடியாகச் செவி சாய்க்காமல் உச்சநீதி மன்ற உத்தரவு வரும்வரை காத்திருந்தது வருத்தத்தைத் தருகிறது.

தஞ்சை மற்றும் நாகை காயிதெ மில்லத் மாவட்டங்களுக்கு நான் இன்று நேரில் சென்று காவிரி வடிநிலப் பகுதிகளைப் பார்வையிட்டேன். பயிர்களின் நிலைமை மிகவும் மோசமாக இருந்ததைக் கண்டேன். விவசாயிகள் பாதிப்புக்கு ஆளாகி உள்ளனர்.

குறுகிய அரசியல் காரணங்களுக்காகக் காவிரியில் தண்ணீர் திறந்து விடுவதைத் தள்ளிப் போடுவது சரியல்ல. உடனடியாகத் தண்ணீர் திறந்துவிடுவது அவசியமாகும்.

*25.6.1991*-இல் நடுவர் மன்றம் அளித்த உத்தரவில் கர்நாடக அரசு ஒரு நீர்ப்பாசன ஆண்டில் ஜூன் முதல் மே மாதம் வரை 205 டி.எம்.சி. தண்ணீர்விட வேண்டும் என்றும், மாதா மாதம், வாரா வாரம் இதைக் குறிப்பிட்ட அளவில் விட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.

இந்த நடுவர்மன்ற உத்தரவு மத்திய அரசின் **10.12.1991**-ந் தேதி கெஜட்டில் வெளியாகியுள்ளது. காவிரி தண்ணீர்த் தகராறு பற்றிய பிரச்சினையில் சம்பந்தப் பட்ட மாநிலங்களை இந்த உத்தரவு கட்டுப்படுத்துகிறது.

ஆனால், நடுவர்மன்ற உத்தரவுக்குப் பின்னரும் கடந்த **1991-92** முதல் **1994-95** வரை மேட்டூர் அணைக்குக் கர்நாடக அணையிலிருந்து எந்தக் குறிப்பிட்ட அளவு தண்ணீர் வரத்தும் ஒரு ஆண்டில் கூட இல்லை என்பது மாண்புமிகு பிரதமருக்கே தெரியும்.

நடப்பு ஆண்டில் தண்ணீர்ப் பற்றாக்குறை அளவு டிசம்பர் முடிய 66.71 டி.எம்.சி. அடி தண்ணீராகும்.

**கேலிக்கூத்து**

கர்நாடக அரசு நடுவர் மன்றத் தீர்ப்பை மதிக்காமல் தொடர்ந்து பிடிவாதமாக நடந்து வருகிறது. இது உச்சநீதி மன்றமும், மத்திய அரசும்

அமைத்த நடுவர் மன்ற அமைப்பையே கேலிக்கூத்தாக்கி விட்டது.

காவிரி நீர்ப் பிரச்சினை தொடர்பாக நடுவர் மன்றம் அளித்தத் தீர்ப்பை நிறைவேற்ற கண்காணிப்புக் குழுவும் அமலாக்கக் குழுவும் அமைக்கப் பட வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்துகிறேன்.

1993-ஆம் ஆண்டு காவிரி விவசாயிகளுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று சென்னையில் உண்ணாவிரதம் இருந்தேன். அப்போது என்னுடைய உண்ணாவிரதத்தை நிறுத்த வேண்டும் என்று பிரதமர் கேட்டுக்கொண்டு, அப்போது மத்திய நீர்ப்பாசன அமைச்சராக இருந்த திரு. வி.சி. சுக்லாவைச் சென்னைக்குப் பிரதமர் அனுப்பி வைத்தார். அப்போது திரு. வி.சி. சுக்லா என்னிடம் பேசும்போது இந்த இரு குழுக்களும் அமைக்கப்படும் என்று உறுதி அளித்தார்.

ஆனால் $2\frac{1}{2}$ ஆண்டுகள் ஆகியும் இந்த இரு குழுக்களும் இதுவரை அமைக்கப்படவில்லை என்பதை மிகுந்த மனவருத்தத் துடன் தெரிவித்துக் கொள் கிறேன். காவிரி நீர்ப் பிரச்சினைக்காகக் கொடுக்கப் படும் உறுதிமொழிகள் நிறை வேற்றப்படவில்லை.

காவிரிப் பாசன விவசாயிகள் நெடுநாட்களாகத் துன்பப்பட்டு வருகின்றனர். 2 ஆயிரம் ஆண்டுகளாக இருந்து வந்த காவிரி விவசாயிகளின் ஜீவாதார உரிமைகள் பாதிக்கப் படுகின்றன. இதற்குக் காரணம்

**புதுடெல்லியில் 30.12.95 அன்று நடைபெற்ற காவிரி நதி நீர் தொடர்பான முதல மைச்சர்கள் மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை**

மத்திய திட்டக் கமிஷனிடம் அனுமதி பெறாமல், கர்நாடகம் சில பாசனப் பகுதிகளை ஏற்படுத்தியுள்ளது.

கர்நாடக அரசின் சட்ட விரோதமான வலுக்கட்டாய மான செயல்பாடுகளை மத்திய அரசு தடுக்கவும் இல்லை. அமைதியாக இருந்துகொண்டு இந்தக் கிளைக் கதையை வேடிக்கைப் பார்க்கிறது.

காவிரிப் பாசனப் பகுதியில் உள்ள பயிர்கள் தண்ணீரில்லாமல் அழியும் அபாயகரமான நிலையில் உள்ளது. இதற்கு உடனடியாகத் தீர்வு காணப்படா விட்டால் தமிழ்நாட்டின் மொத்தப் பொருளாதார நிலை மிகவும் பாதிக்கும். காவிரி விவசாயத் தொழிலாளர்கள் மிகவும் துன்பப்படுவார்கள்.

11.12.95 அன்று தமிழக அரசு உச்சநீதி மன்றத்தில் ஒரு மனுவைத் தாக்கல் செய்தது. இது தொடர்பாக நடுவர் மன்றத்தை அணுகும்படி உச்சநீதி மன்றம் தமிழக அரசுக்கு உத்தரவிட்டது. பிறகு தமிழக அரசு ஒரு அவசர மனுவை நடுவர் மன்றத்திடம் தாக்கல் செய்தது. இதைத் தொடர்ந்து உடனடியாக 11 டி.எம்.சி. தண்ணீருடன் சேர்த்து, டிசம்பர் மாதத்துக்குரிய 6.19 டி.எம்.சி. தண்ணீரையும் 1996-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்துக் குரிய 2.5 டி.எம்.சி. தண்ணீரையும் வழங்க வேண்டும் என்று நடுவர் மன்றம் தீர்ப்பு கூறியது.

நடுவர் மன்றத் தீர்ப்பின்படி தண்ணீரைத் திறந்துவிடும்படி கர்நாடக முதலமைச்சருக்குத் தொடர்ந்து கடிதங்கள் எழுதினேன். காவிரி டெல்டாப் பகுதியில் பயிரிடப்பட்டுள்ள நெற்பயிர்களைக் காப்பாற்ற உடனடியாகத் தண்ணீர் திறந்து விட மாண்புமிகு கர்நாடக முதலமைச்சரை வற்புறுத்த வேண்டும் என்று உங்களிடமும் (திரு. நரசிம்மராவ்) வேண்டுகோள் விடுத்தேன். உச்சநீதிமன்ற உத்தரவுக்கு இணங்க காவிரி நடுவர் மன்றம் பிறப்பித்த தீர்ப்பின்படி கர்நாடக அணைக் கட்டுகளிலிருந்து எந்தத் தண்ணீ ரும் வரவில்லை என்பதை வருத்தத்துடன் சுட்டிக்காட்டு கிறேன்.

மேட்டூர் அணைக்கட்டில் தண்ணீர் இருப்பு அபாயக் கட்டத்தில் உள்ளது. காவிரி ஆயக்கட்டுப் பகுதியில் 13.3 இலட்சம் ஏக்கர் நிலத்தில் பயிரிடப்பட்டுள்ள நெற்பயிர்கள் வாடிக் கொண்டிருக்கின்றன. இது விவசாயத்தைப் பாதிக்கக் கூடியது. இதனால் ஏற்படக் கூடிய 800 கோடி ரூபாய் இழப்பு தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, நாடு முழுமைக்கும் நஷ்டமாகும்.

நடுவர் மன்றத் தீர்ப்பை ஏற்று காவிரியில் தண்ணீர் திறந்துவிடும்படி, கர்நாடக அரசுக்கு வேண்டுகோள் விடுப்ப தற்கும் கண்காணிப்புக் குழு அமைக்கும்படி மத்திய அரசை

வற்புறுத்துவதற்கும் 28-ந் தேதி தமிழகச் சட்டசபை கூடியது.

சபையின் உணர்வைப் பிரதி பலிக்கும் வகையில் தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. அந்தத் தீர்மானம் மாண்புமிகு பிரதமருக்கும் அனுப்பப்பட்டது.

என்னால் கூட்டப்பட்ட அனைத்துக் கட்சிக் கூட்டத் திலும் அனைவரும் இதே கருத்தை உறுதியாகத் தெரிவித் தார்கள்.

உச்சநீதி மன்றம், நடுவர் மன்றம் உட்பட அனைத்து விசாரணை அமைப்பிலும் தமிழகத் தரப்பு வாதத்தை வற்புறுத்திக் கூறியிருக்கிறோம்.

தனிப்பட்ட முறையில் கூட மாண்புமிகு கர்நாடக முதலமைச்சர், மாண்புமிகு மத்திய நீர்வள மேம்பாட்டுத் துறை அமைச்சர், மாண்புமிகு பிரதமர் ஆகியோருடன் பேச்சு வார்த்தை நடத்தியிருக்கிறேன்.

நடுவர் மன்றத் தீர்ப்பை அமல்படுத்தும்படி மத்திய அரசைக் கோரி நான் அறப்போராட்டம் கூட நடத் தினேன்.

தண்ணீர் இல்லாமல் வாடும் பயிர்களைக் காப்பாற்ற உடனே தண்ணீர் திறந்துவிடும்படி நடுவர் மன்றம் அளித்தத் தீர்ப்பு புறக்கணிக்கப்பட்டுவிட்டது.

நடுவர் மன்றத் தீர்ப்பை ஏற்க முடியாது. அதை நிறைவேற்ற மாட்டோம் என்று கர்நாடக அரசு பகிரங்கமாகவே அறிவித்துவிட்டது. சட்டப் பூர்வமாக அமைக்கப்பட்ட ஒரு நீதிமன்றத்தின் உத்தரவை ஏற்க மறுப்பது ஜனநாயகத்தின் அடிப் படையையே தாக்குவதாகும். இது அரசியல் சட்டத்தையே அவமதிப்பதாகும்.

காவிரியில் எவ்வளவு தண்ணீர் கிடைக்கிறது? சம்பந்தப் பட்ட மாநிலங்களுக்குத் தேவைப் படும் தண்ணீரின் அளவு எவ்வளவு என்பதை எல்லாம் கவனத்துடன் பரிசீலனை செய்துதான் நடுவர் மன்றம் உத்தரவு பிறப்பித்திருக்கிறது. அந்த அடிப்படையில்தான், பின்னர் இது தொடர்பாக நாங்கள் உச்சநீதி மன்றத்திற்குச் சென்றபோது அது நடுவர் மன்ற உத்தரவை நிறைவேற்ற வழி வகை காண வேண்டும் என்று மாண்புமிகு பிரதமரைக் கேட்டுக் கொண்டது. உச்சநீதி மன்றத்தின் உத்தரவு மிகத் தெளிவாக உள்ளது.

நடுவர் மன்றம் நிர்ணயித்த படி 11 டி.எம்.சி. தண்ணீர் கொடுக்கப்பட வேண்டும். இது கொடுக்கப்பட வேண்டிய வழி முறைகள் பற்றிதான் இன்று இங்கு முடிவு செய்யப்பட விருக்கிறது. எனவே இதில் இரண்டாவது நிலையோ அல்லது வேறு மாற்றுக் கருத்தோ எதுவும் கிடையாது. கர்நாடகம் தண்ணீர்த் திறந்துவிடுவதன் மூலமே இதில் இறுதியான நீதி கிடைக்கும்.

இதற்கு மறுப்பு தெரிவிக்கப் படுமானால், அது உச்சநீதி மன்றத்துடன் நேரடியாக மோதுவதாகவும் ஜனநாய கத்தின் அடிப்படையைத் தகர்ப்பதாகவும், தேசத்தின் அடிப்படை அமைப்பைச் சேதப் படுத்துவதாகவும் அமையும். எனவே, நம் நாட்டின் வரலாற்றில் இதுபோன்ற ஒரு நாசகரமான சம்பவம் ஏற்படு வதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் தான் மாண்புமிகு பிரதமரை நான் முன்பே கேட்டுக் கொண்டேன்.

நடுவர் மன்றம் மற்றும் உச்சநீதி மன்றம் பிறப்பித்த உத்தரவுகளுக்கு இணங்க நடக்க வேண்டும் என்று கர்நாடக அரசுக்குக் கட்டளையிட அரசியல் சட்டத்தின் கீழ், பிரதமருக்குப் போதிய அதிகாரம் இருக்கிறது என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டிய அவசியம் இல்லை.

**யார் மனிதன்?**

கருணையும் இரக்கமும் இல்லாத ஒருவனை மனிதன் என்று அழைக்க முடியாது.

**—சாரதா தேவியார்**

**கடவுளைக் காண**

கடமையை உணரும் சக்தியும், அதைச் செய்யும் தன்மையும் கொண்ட மனிதனுக் குத்தான் கடவுள் காட்சித் தருவார்.

**—போர்க்**

**எது வாழ்க்கை?**

வாழ்க்கை என்பது ஒருவன் தனக்காக வாழ்வதன்று. நாம் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்வதற்கே.

**—மினாண்டர்**



**மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தலைமையில் காவிரி நதி நீர்ப் பிரச்சினைக் குறித்து டெல்லி சென்று திரும்பிய பின் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் கூட்டம் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. (2.1.96)**

# காவிரியில் உடனே தண்ணீர் திறந்துவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## மாண்புமிகு பிரதமர் அவர்களை வற்புறுத்தி அனைத்துக் கட்சிகள் தீர்மானம்

**த**மிழ்நாட்டில் வாடியப் பயிர்களைக் காப்பாற்றுவதற்காக, கர்நாடக அரசு உடனடியாக 6 டி.எம்.சி. (600 கோடி கன அடி) தண்ணீரை ஒரு நாளைக்கு 1 டி.எம்.சி. தண்ணீர் வீதம் திறந்துவிட வேண்டும் என்றும், இரு மாநிலங்களிலும் நிபுணர் குழுவினர் பார்வையிட்டு, வருகிற 10-ந் தேதிக்குள் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்றும் பிப்ரவரி மாதத்தில் அனைத்து முதலமைச்சர்கள் கூட்டத்தைக் கூட்டி நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்சினை பற்றி பரிசீலிக்கப்படும் என்றும் மாண்புமிகு பிரதமர் அறிவித்தார்.

### அனைத்துக் கட்சிக் கூட்டம்

இந்த அறிவிப்பைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களுடன் கலந்து பேச, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் முடிவெடுத்தார்.

தலைமைச் செயலகத்தில் அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டம் 2.1.96 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் நடந்தது.

அனைத்து அமைச்சர்களும் கூட்டத்தில் பங்கேற்றனர். தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு என். அரிபாஸ்கர், பொதுப் பணித்துறைச் செயலாளர் திரு பாஸ்கரதாஸ், விவசாயத்துறைச் செயலாளர் ஆர்.சி. பாண்டா, தமிழகக் காவிரி ஆலோசனைக் குழுத் தலைவர் திருமலை, காவிரி தொழில்நுட்பப் பிரிவுத் தலைவர் திரு மோகன கிருஷ்ணன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

உச்சநீதி மன்றம் 28.12.1995 அன்று பிறப்பித்த ஆணையின் அடிப்படையில் கர்நாடக அணைகளிலிருந்து தமிழகத்திற்குக் காவிரி நீர் வழங்குவது குறித்து மாண்புமிகு பாரதப் பிரதமரால் எடுக்கப்பட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சருக்கு 1.1.1996 அன்று எழுதப்பட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்த முடிவுகள் குறித்து விவாதிப்பதற்காக மாண்புமிகு மத்திய நலத்துறை இணை அமைச்சர், தமிழ்நாட்டின் அமைச்சர்கள், தமிழகச் சட்டமன்றக் கட்சிகளின் தலைவர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அனைத்துக் கட்சித்தலைவர்கள், சமூக நலச் அமைப்புகளின் தலைவர்கள், விவசாய நல சங்கங்களின் தலைவர்கள் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் மேட்டூர் அணைக்கு வெறும் 6 டி.எம்.சி. அடி நீர் வந்து சேரும் வண்ணம் நீரைவிட வேண்டும் என்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அறிவித்த முடிவு மற்றும் அதன் தொடர்புடைய இதர விஷயங்கள் அனைத்து அரசியல் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டு, கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டன:

மாண்புமிகு பாரதப் பிரதமர் 1.1.1996 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு எழுதியுள்ள கடித்தில் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால் எடுக்கப்பட்டு, தெரிவிக்கப்பட்டுள்ள முடிவில் கீழ்க்கண்ட குறை பாடுகள் உள்ளன:

காவிரி நதி நீர் நடுவர் மன்ற தீர்ப்பை அமல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்க

மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு உள்ள அதிகாரத்தைக் குறைத்து மதிப்பிடாத அதே வேளையில், நடுவர் மன்றம் தெரியப்படுத்தியுள்ள ஆணைகளில் பிரதமருக்கு வழக்கு நடத்தி தீர்வு காணுகின்ற அதிகாரமும் இல்லை. எனவே. காவிரி நதி நீர் நடுவர் மன்றத்தின் ஆணைகளுக்கு மாறுபட்ட தன்மை உள்ள முடிவுகளை மாண்புமிகு பிரதமர் எடுத்திருக்கக்கூடாது.

காவிரி நதி நீர் நடுவர் மன்றம் தெரிவித்த 11 டி.எம்.சி. அடி என்ற தண்ணீரின் கொள்ளளவை 6 டி.எம்.சி. தண்ணீர் அடி என மாற்றியது, ஒரு நாளைக்கு 1 டி.எம்.சி. தண்ணீர் விடலாம் எனத் தீர்மானித்திருப்பது, காவிரி நதி நீர் நடுவர் மன்றம் ஏற்கெனவே விரிவாக ஆராய்ந்து முடிவு செய்திருந்த தொழில்நுட்ப அம்சங்களைப் பரிசீலிக்கப் புதிதாக ஒரு நிபுணர் குழுவை அமைத்திருப்பது போன்ற பிரதமரின் முடிவுகள், உச்சநீதி மன்றம் பிறப்பித்த ஆணைகளுக்கு மாறுபட்டதாக உள்ளது. காவிரி நதி நீர் நடுவர் மன்றம் பிறப்பித்த ஆணைகளில் உச்சநீதி மன்றம் எவ்வித மாறுதலையும் செய்ய கருதவில்லை. அதற்கு மாறாக நடுவர் நீதி மன்றம் தீர்ப்பளித்த 11 டி.எம்.சி. அடி நீரை உடனடியாக, கர்நாடக அரசு திறந்து விடுவதற்குத் தகுந்த நடைமுறைகளைக் கண்டறிந்து, செயல்படுத்தத்தான் உச்சநீதி மன்றம் ஆணை பிறப்பித்திருந்தது. மேலும், கர்நாடக அரசு அளித்த புள்ளி விவரங்களின் அடிப்படையில்தான், காவிரி நதி நீர் நடுவர் மன்றம், கர்நாடக அரசு 11 டி.எம்.சி. அடி அளவு நீரைத் தமிழகத்திற்கு வழங்க வேண்டுமென ஏற்கெனவே தீர்ப்பளித்திருந்தது.

மாண்புமிகு பாரதப் பிரதமரின் முடிவு காவிரி நதி நீர் நடுவர் மன்றத்தின் தீர்ப்பின் சாராம்சத்திற்கும் உச்சநீதி மன்றத்தின் ஆணைக்கும் மாறுபட்டதாக இருகின்றபோதிலும் தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் கூடியுள்ள அனைத்துக் கட்சித் தலைவர்கள் உடனடியாக 6 டி.எம்.சி. அடி தண்ணீரை, கர்நாடக அரசு தமிழகத்திற்கு வழங்க வேண்டும் என்ற மாண்புமிகு பிரதமரின் முடிவை, தங்களது எதிர்ப்பையும், அதிருப்பதியையும் பதிவு செய்து மாண்புமிகு பிரதமர் காவிரி நதி நீர் நடுவர் மன்றத்தின் தீர்ப்பின்படி மீதமுள்ள 5 டி.எம்.சி. அடி நீரைத் தாமதமின்றித் தொடர்ச்சியாகக் காவிரி நதி பாயும் நிலங்களுக்குக் கிடைக்குமாறு கர்நாடக அரசு வழங்குவதை உறுதிப்படுத்துவார் என்ற நம்பிக்கையில் ஏற்றுக் கொள்கிறது.

இந்த நீரின் அளவுடன் 25.6.1991 அன்றைய காவிரி நதி நீர் நடுவர் மன்ற இடைக்கால ஆணையில் கூறப்பட்டுள்ளவாறு, 1995-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கு வழங்க வேண்டிய நீரையும் மற்றும் 1996-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கு வழங்க வேண்டிய நீரையும் சேர்த்துத் தமிழகத்திற்கு வழங்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றது.

**தூ**ய்மையுடையவன் கடவுளை மிக நெருங்கியவனாகிறான்.

**—சுவாமி விவேகானந்தர்**

இங்கு கூடியுள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களும் மற்றவர்களும் வெளிப்படுத்திய உணர்வுகளையும் இங்கு நிறைவேற்றப் பட்ட தீர்மானங்களையும் மாண்புமிகு பிரதமருக்கு உடனடியாக தெரிவிக்க வேண்டும் என்றும் தமிழகத்திற்குக் குறிப்பாக காவிரிப் படுகை விவசாயிகளுக்கு நீதி வழங்க வேண்டுமெனக் கோரி மாண்புமிகு பிரதமருக்கு, மாண்புமிகு தமிழக முதல் அமைச்சர் கடிதம் எழுத வேண்டும் என்றும் இந்தக் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

காவிரி நதி நீர் நடுவர் மன்றத்தின் 19.12.1995-ஆம் தேதியிட்ட ஆணைக்கும் உச்சநீதி மன்றம் 28.12.1995 அன்று பிறப்பித்த ஆணைக்கும் பிறகு நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பற்றி தமிழ்நாடு அரசு சட்ட ஆலோசனைகளைப் பெற்று காவிரி நதி நீர் நடுவர் மன்றம் மற்றும் உச்சநீதி மன்றம் ஆகியவைகளிடம் சரியான நேரத்தில் சமர்ப்பிக்கும்.

மேலும், தமிழ்நாடு அரசு காவிரிப் படுகை விவசாயிகள், காவிரி நதி நீர்ப் பங்கீட்டு விஷயத்தில் நீதி பெறுவதற்கு

அனைத்து உறுதியான நடவடிக்கைகளையும் சரியான நேரத்தில் தொடர்ந்து எடுக்க வேண்டும் என்றும் இந்தக் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சருக்கு 1.1.1996-ஆம் தேதியிட்ட கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்ட மாண்புமிகு பிரதமரின் முடிவிற்கு ஏற்ப கர்நாடக அரசும் ஏற்று 6 டி.எம்.சி. அடி நீரையும், 1996-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்குரிய 2.51 டி.எம்.சி. அடி நீரையும் ஆக மொத்தம் 8.51 டி.எம்.சி. அடி நீரை மேட்டூர் அணைக்கு உடனடியாகக் கொண்டு வந்து சேர்ப்பதற்கான தகுந்த உறுதியான நடவடிக்கைகளை விரைவாக மேலும் எந்தத் தாமதமும் இன்றி எடுக்க மாண்புமிகு பிரதமரை இந்த அனைத்துக் கட்சிக் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

# மாண்புமிகு முதல்வருக்கு ஆதிதிராவிடர் நல உயர்மட்டக் குழு உறுப்பினர்கள் பாராட்டு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் தலைமையில் மாநில ஆதிதிராவிடர் நல உயர்மட்டக் குழுவின் State Advisory Committee for the Welfare of Adi Dravidars முதல் கூட்டம் டிசம்பர்த் திங்கள் முதல் நாள் அன்று சென்னை தலைமைச் செயலகத்திலன் புதிய கட்டடத்தின் 10வது மாடியில் அமைந்துள்ள மாநாட்டு அரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

இக்கூட்டம் காலை 10 மணிக்குத் தொடங்கி மதியம் 1.30 மணி வரை 3 மணி 30 நிமிட நேரம் நடைபெற்றது.

தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு என். அரிபாஸ்கர், இ.ஆ.ப., கூட்டத்திற்கு வந்திருந்தவர்களை வரவேற்றுப் பேசினார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தலைமையுரையாற்றினார்.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட மாநில உயர்மட்டக் ஆதிதிராவிடர் நலக் குழுவின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரையும் தனத்தனியே வருமாறு அழைத்து அவர்களது ஆலோசனைகளையும், கருத்துக்களையும் தெரிவிக்குமாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார். அதன்படி, இந்தக் குழுவினர் அனைவரும் தங்களது கருத்துக்களையும், ஆலோசனைகளையும் தெரிவித்தார்கள்.

பலர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினப் பெருமக்களின் நல்வாழ்விற்காக எடுத்து வருகின்ற நடவடிக்கைகளுக்காகத் தங்களது பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொண்டார்கள்.

தமிழக அரசு செயல்படுத்தி வருகின்ற திட்டங்களையும், செயல்பாடுகளையும் குறித்துத் தங்களது கருத்துக்களைத் தெரிவித்தார்கள். பின்னர் கூட்ட நிறைவில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல்வாழ்வுத்துறைச் செயலாளர் திரு பி. நடேசன் அவர்கள் நன்றி நவின்றார்.

# தமிழ்நாட்டுக்கு 6 டி.எம்.சி. தண்ணீர்

## கர்நாடக அரசுக்கு மாண்புமிகு பிரதமர் ஆணை!

**கா**விரி நீர்ப் பிரச்சினையில் மாண்புமிகு பிரதமர் திரு பி.வி. நரசிம்மராவ் அவர்கள் தனது இறுதி முடிவை 1-1-96 அன்று அறிவித்தார். தமிழ்நாட்டில் வாடும் பயிர்களைக் காப்பாற்ற காவிரியில் 6 டி.எம்.சி. தண்ணீரைக் கர்நாடக அரசு உடனடியாகத் திறந்துவிட வேண்டும் என்று மாண்புமிகு பிரதமர் உத்தரவிட்டிருக்கிறார்.

காவிரிப் பாசனப் பகுதியில் பயிரிடப்பட்டுள்ள நெற்பயிர்கள் போதிய தண்ணீர் இல்லாததால் கருகும் நிலையில் உள்ளன.

வாடும் பயிர்களைக் காப்பாற்ற காவிரியில் 11 டி.எம்.சி. தண்ணீரைக் கர்நாடக அரசு திறந்துவிட வேண்டும் என்று நடுவர் மன்றம் உத்தரவிட்டது.

அந்த உத்தரவை ஏற்க கர்நாடக அரசு மறுத்ததால் உச்சநீதி மன்றத்தில் தமிழக அரசு மனுச் செய்தது. இந்த மனுவை விசாரித்த உச்சநீதி மன்ற நீதிபதிகள் இந்தப் பிரச்சினையில் 'மாண்புமிகு பிரதமர் அவர்கள் தலையிட்டு இரு மாநில முதலமைச்சர்களுடனும் பேசித் தீர்வு காண வேண்டும் என்று உத்தரவிட்டனர்.

அதன்படி தமிழ்நாடு, கர்நாடக மாநில முதலமைச்சர்களின் கூட்டத்தை மாண்புமிகு பிரதமர் அவர்கள் கூட்டி ஆலோசனை நடத்தினார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் 31.12.95 அன்று முன்தினம் அனைத்துக் கட்சித் தலைவர்களுடன் சென்று இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார். 2 நாள் இந்த ஆலோசனை நடந்தது.

முதலமைச்சர்களுடன் ஆலோசனை நடத்திய மாண்புமிகு பிரதமர், மாண்புமிகு மத்திய அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் அடுத்தக்கட்ட நடவடிக்கை பற்றி ஆலோசனை நடத்தினார்.

பின்னர் காவிரிப் பிரச்சினை பற்றி இறுதி முடிவு 1-1-96 அன்று இரவு வெளியிடப் பட்டது. அதில் 3 அம்சத் திட்டம் கூறப்பட்டது. அதன் விவரம் வருமாறு:

**6 டி.எம்.சி. தண்ணீர்**

1. தமிழ்நாட்டில் வாடியப் பயிர்களைக் காப்பாற்றுவதற்காக, கர்நாடக அரசு 6 டி.எம்.சி. தண்ணீரை உடனடியாகத் திறந்துவிட வேண்டும். ஒரு நாளைக்கு 1 டி.எம்.சி. வீதம் தண்ணீர் திறந்து விடப்பட வேண்டும்.

2. இரு மாநிலங்களிலும் உள்ள அணைகளின் தண்ணீர் அளவு, பயிர்களின் நிலைமை பற்றி ஆய்வு நடத்த ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத் துணை வேந்தர் டாக்டர் ஒய்.கே. அலெக், ரூர்க்கி பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் திரு பரத்சிங், மத்தியப் பிரதேச மாநில முன்னாள் தலைமை என்ஜினியர் கேப்ரிகான் ஆகிய 3 பேர் கொண்ட நிபுணர் குழு அமைக்கப்படுகிறது.

இந்தக் குழு பாதிக்கப்பட்ட மாநிலங்களில் அணைகளில் உள்ள தண்ணீர் அளவு, பயிர்களின் நிலைமை ஆகியவற்றை நேரில் பார்த்து வருகிற ஜனவரி மாதம் 10-ஆம் தேதிக்குள் அறிக்கை தாக்கல் செய்யும்.

3. பிப்ரவரி மாதத்தில் அனைத்து முதலமைச்சர்கள் கொண்ட நீர்வள மேம்பாட்டுக் குழுக் கூட்டம் நடைபெறும். இந்தக் கூட்டத்தில் மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்சினைப் பற்றிப் பரிசீலிக்கப்படும்.

இதுபற்றி இரு முதலமைச்சர்களுக்கும் தகவல் கொடுக்கப் பட்டிருப்பதாகவும் மத்திய அரசு அறிவித்தது.

**ஆலோசனை**

முன்னதாக, 1.1.96 அன்று காலை மாண்புமிகு பிரதமர் திரு பி.வி. நரசிம்ம ராவ் அவர்களை, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் மீண்டும் சந்தித்தார். காலை 10.30 மணி முதல் 12 மணி வரை $1\frac{1}{2}$ மணி நேரம் இந்தச் சந்திப்பு நடந்தது.

இந்தப் பேச்சுவார்த்தையின் போது மாண்புமிகு மத்திய நீர்வளத்துறை அமைச்சர் திரு வி.சி. சுக்லா, மத்திய அரசு நீர்வளத்துறைச் செயலாளர் திரு எம்.எஸ்.ரெட்டி, இணை ஆணையர் திரு கே.சி. அகர்வால், தமிழகக் காவிரி ஆலோசனைக் குழுத் தலைவர் திரு ஆர். திருமலை, காவிரி தொழில்நுட்பப் பிரிவுத் தலைவர் திரு ஏ. மோகன கிருஷ்ணன் ஆகியோர் உடன் இருந்தனர்.

பேச்சுவார்த்தையின் இறுதியில் மாண்புமிகு பிரதமர் அவர்கள், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களிடம், “கர்நாடக அணைக் கட்டுகளிலிருந்து காவிரித் தண்ணீர் திறந்து விடுவது குறித்து ஒரு முடிவு இரவுக்குள் அறிவிக்கப்படும்” என்று தெரிவித்தார்.

இந்த முடிவு எடுக்கப்படும் வரை டில்லியில் தங்கி இருக்க வேண்டுமா? என்று முதல்வர் குறிப்பிட்டுக் கேட்டதற்கு, முதல்வர் தங்கியிருக்கத் தேவையில்லை முடிவு சென்னையில் முதல்வருக்குத் தெரிவிக்கப் படும்” என்று மாண்புமிகு பிரதமர் அவர்கள் தெரிவித்தார்.

பின்பு, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், மாண்புமிகு தமிழக அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர்கள் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்களுடன் சென்னை திரும்பினார்.

---

# யாருக்காக எழுதினார்?

திருக்குறள் 2 வரிகளில் தான் எழுதப்பட்டிருக்கிறது. திருவள்ளுவர் யாருக்காக எழுதினார்? தமிழர்க்குப் பயன்படுவதற்காக எழுதினார். தமிழ் வளர்ச்சிக்குப் பயன்படுவதற்காக, தன் குடும்பத்திற்காக அல்ல. தனக்காக அல்ல! 2000 ஆண்டுக்குப் பிறகு தமிழகத்தில் நமக்குப் பாராட்டுக் கிடைக்கும் என்பதற்காக அவர் எழுதவில்லை. அவர் தனது கடமையைச் செய்தார். அதன் பலன் இன்று தமிழ் மக்களுக்குக் கிடைத் திருக்கிறது.

–டாக்டர் எம்.ஜி.ஆர்.





# நடுவர் மன்றத்தின் தீர்ப்பினைப் புறக்கணிப்பது துரதிருஷ்டவசமானது!

## மாண்புமிகு முதல்வர் அறிக்கை

கர்நாடக மாநில அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தேசிய நீர்ப் பங்கீட்டு வழிகாட்டி விதிகள் உருவாக்கப்படும்வரை கர்நாடக மாநிலம் காவிரி நதி நீர் நடுவர் மன்றத்தின் நடவடிக் கைகளில் பங்கேற்கக் கூடாது என்று ஒருமனதாகத் தீர்மானித் துள்ளது என்பது எனது கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டுள்ளது. தேசிய நீர் வாரியத்தால் ஏற்கெனவே தயாரித்து விவாதிக்கப்பட்ட பன் மாநில நீர்ப் பங்கீட்டு முறை குறித்த வழிகாட்டு விதிமுறைகள் **1996**-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதலமைச்சர்களை உறுப்பினர்களாகக் கொண்ட நீர்வளக் கவுன்சில் கூட்டத்தில் விவாதிக்கப்பட உள்ளதை மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் தனது கடிதத்தில் குறித்துக் காட்டியதன் அடிப் படையில் இந்தத் தீர்மானம் ஏற்பட்டதாகத் தெரிகிறது.

இத்தகையத் தீர்மானம் துரதிருஷ்டவசமானது என்று கருதுகிறேன். ஏனென்றால் நடுவர் மன்றம் என்பது இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழும் பன் மாநிலத் தண்ணீர் தாவாச் சட்டத்தின் கீழும் கிடைக்கப் பெறுகின்ற மிக உயர்ந்த மற்றும் தகுதி வாய்ந்த நீதிமன்ற அமைப்பாகும்.

### முன்னேற்றம்

காவிரி நதி நீர் நடுவர் மன்றம் ஏற்கெனவே புள்ளி விவரங்களைச் சேகரிப்பதிலும், அவற்றை முறைப்படுத்தி வைப்பதிலும் ஒரு முன்னேற் றத்தை ஏற்படுத்தியுள்ளது. தமிழகத்தின் தரப்பில் விசாரிக்க வேண்டிய அனைத்து சாட்சியங் களும் ஏற்கெனவே விசாரித்து முடிக்கப்பட்டு விட்டன. நடுவர் மன்றத்தின் நடவடிக்கைகள் மிக உச்சக் கட்டத்தை அடைந்துள்ள இந்தச் சூழ்நிலையில் அதனு டைய நடவடிக்கைகளுக்குக் குந்தகம் ஏற்படுத்துவது உண்மையில் எவருக்கும் உதவி கரமாக இருக்காது.

### தேசிய நீர்க் கொள்கை

தேசிய நீர்க் கொள்கைக்கான வழிகாட்டி விதிகள் விவாத நிலையிலேயே இன்னும் இருக் கின்றன. இந்தக் கொள்கை குறித்து பல மாநிலங்கள் பல்வேறு விதமான கருத்துக் களைக் கொண்டுள்ளன. இவற்றின் மீது ஒரு ஒட்டு மொத்தக் கருத்து உருவாகும் வரையிலும் ஒரு இறுதித் தீர்மானம் நிறைவேற்றப்படும் வரையிலும் தற்போது நிலவு கின்ற சூழ்நிலைக்கு இந்த வரைவு விதிமுறைகளுக்கு எந்தப் பொருத்தமும் இருக்காது. மேலும் அவ்வாறு நாம் மேற் கொள்கின்ற தீர்மானம் எதிர்காலத்தில் எழுகின்ற தாவாக்களுக்கு வேண்டு மானால் பொருந்துமே தவிர

நடுவர் மன்றத்தின் முன்பு விசாரணைக்கு வந்து மிக முக்கியமான கட்டத்தை அடைந்துள்ள வழக்குகளை இந்த வழிகாட்டி விதிகள் எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது.

பன் மாநிலத் தண்ணீர் தாவா ஒன்றை நடுவர் மன்றத்திற்கு அனுப்பப்படும் சூழ்நிலையிலும் அந்த ஒரு அமைப்பு மட்டும்தான் இத்தகைய தாவாக்களை விசாரிக்கும் தகுதியும் திறமையும் வாய்ந்த உயர் அமைப்பாக இருக்கும் சூழ்நிலையிலும் இந்த வழக்குக்குத் தொடர்புடைய ஒரு மாநிலம் அதன் நடவடிக்கைகளில் பங்கு கொள்ளாமல் இருப்பதோ அல்லது அத்தகைய ஒரு நிர்வாக ஆணையோ அல்லது ஒரு தீர்மானமோ மிக உயர்ந்த நீதிமன்ற அமைப்பான நடுவர் மன்றத்தைக் கட்டுப்படுத்தாது. தற்போதுள்ள நீதிமன்ற நடவடிக்கைகள் பாரபட்சமில்லாததோடு, ஒரு குறிப்பிட்ட இலக்குடனும் செயல்பட்டு வருகின்றது. இத்தகைய சூழ்நிலைகளில் நீர்ப் பங்கீட்டுத் தொடர்பான வழிகாட்டி விதிகளை நாம் முழுமையாக உருவாக்குவதற்கு முன்னதாகவே, நீர் தாவாப் பிரச்சினைக்குட்பட்ட ஒரு மாநிலம் இந்த நடுவர் மன்றத்தின் நடவடிக்கைகளில் பங்கேற்பதில்லை என்று கூறுவது சற்றும் இயல்பானதாக இல்லை.

—இவ்வாறு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

## அடுத்த இதழில்...

- ☆ வேலூரில் நடைபெற்ற தமிழ்நாடு சத்துணவுப் பணியாளர்கள் மாநில மாநாடு
- ☆ அனைத்து மகளிர் காவல் நிலையங்களின் பணிகள் ஆய்வு: மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூட்டிய கூட்டம்
- ☆ இருதய நோய் மருத்துவமனை - திறப்பு விழா
- ☆ அம்பேத்கர் மக்கள் விடுதலை முன்னணி மாநில மாநாடு
- ☆ இந்தியக் குடியரசுத் தலைவரின் பதக்கம் வழங்கும் விழா
- ☆ 47-வது குடியரசுத் தினவிழா
- ☆ திருவள்ளுவர் திருநாள்
- ☆ இராமநாதபுரம் மாவட்டத்தில் - வறட்சி மாவட்டங்களின் ஆட்சித்தலைவர்கள் கூட்டம்
- ☆ கரூர் தீரன் சின்னமலை கவுண்டர் மாவட்டத்தில் தந்தை பெரியார் பிறந்த நாள் விழா
- ☆ வடஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் - பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா மற்றும் அரசுப் பொருட்காட்சி விழா
- ☆ காமராசர் மாவட்டத்தில் காயிதேமில்லத் நூற்றாண்டு விழா
- ☆ மதுரை மாவட்டத்தில் பல்துறை பணி விளக்க முகாம்
- ☆ சேலம் மாவட்டத்தில் காயிதேமில்லத் நூற்றாண்டு விழா
- ☆ ஈரோட்டில் பல்துறை பணி விளக்க முகாம்

கொடமாண்டப்பட்டியில் 3 தொகுப்பு வீடுகளையும், சாணிப் பட்டி கோடிப்பதி, அத்திப் பள்ளம் ஆகிய இடங்களில் நான்கரை இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்ட 3 தொடக்கப் பள்ளிக் கட்டடங் களையும், முருக்கம்பட்டி, ஓட்டப்பட்டி, ஓடிப்பதி மற்றும் சாணிப்பட்டி ஆகிய இடங்களில் 3 இலட்சம் செலவில் கட்டப் பட்ட சத்துணவுக்கூட கட்டடங் ளையும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார். பின்னர், கொடமாண்டப் பட்டியில் இரண்டேகால் இலட்சம்ரூபாய் செலவில் ஆதி திராவிடர்களுக்கு 10 தொகுப்பு வீடுகள், அத்திப்பள்ளத்தில் 1 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவில் 8 தொகுப்பு வீடுகள் ஆகியவற்றிற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

## ஜோகிப்பட்டி

கடந்த நான்கரை ஆண்டு காலத்தில் அந்தேரிப்பட்டி ஊராட்சிப் பகுதியில் பதினான் கரை இலட்சம் ரூபாய் செலவில் 3 மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளும், 10 ஆழ்குழாய்க் கைப்பம்புகளும், 77 ஆயிரம் ரூபாய் செலவில் சத்துணவுக் கூடக் கட்டடமும், 65 ஆயிரம் ரூபாய் மதிப்பில் 3 தொகுப்பு வீடுகளும், ஒரு இலட்சம் ரூபாய் செலவில் சமையலறைக் கட்டடமும், ஆக கிட்டத்தட்ட 30 இலட்சம் ரூபாய் மதிப்பில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. மேலும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 5 இலட்சம் ரூபாய் மதிப்பில் 94 பேருக்குக் கடனுதவிகள் வழங்கப் பட்டுள்ளன.

ஜோகிப்பட்டி கிராமத்தில் 5 இலட்சம் ரூபாய் மதிப்பில் ஒரு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியும், இரண்டேகால் இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட தொடக்கப்பள்ளிக் கட்டடத்தையும், 67 ஆயிரம் ரூபாய் செலவில் சத்துணவுக் கூடக் கட்டடத்தையும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்.

## குன்னத்தூர்

குன்னத்தூர் பகுதிகளில் கடந்த நான்கரை ஆண்டுகளில் ஒரு கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் செயல் படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக 8 இலட்சம் ரூபாய் செலவில் 2 மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளும், 2 இலட்சம் ரூபாய் செலவில் ஆழ்குழாய்க் கைப்பம்புகளும் மற்றும் 88 இலட்சம் ரூபாய் செலவில் சாலை மேம்பாட்டுப் பணிகளும் செய்யப்பட்டுள்ளன. இதுதவிர ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 84 பேருக்கு நாலேகால் இலட்சம் ரூபாய் கடனுதவிகளும், 27 குடும்பங் களுக்கு வீடு கட்டுவதற்காக 3 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் கூட்டுறவுக் கடன் வசதியும் செய்யப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழக முதல்வர் நிகழ்ச்சி நாளன்று 12 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்ட மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியையும், இரண்டேகால் இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்ட மேல் நிலைப் பள்ளிக் கட்டடத்தையும், 20 தொகுப்பு வீடுகளையும், மற்றும் ஒன்றரை இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட பள்ளிக் கட்டடத்தையும், திறந்து வைத்தார். மேலும், முத்தா கவுண்டனூர், காமாட்சிப்பட்டி, ஆதாலியூர், கே.பாப்பாரப்பட்டி, ஆகிய ஊர்களில் இலட்சம் ரூபாய் செலவில ஜவகர் பள்ளிக் கட்டடங்களையும், குமாரப்பட்டியில் 80 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட சத்துணவுக் கட்டடத்தையும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார்.

## சாமல்பட்டி

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சாமல் பட்டிக்கு வருகை தந்து, கிட்டத்தட்ட 24 இலட்சம் ரூபாய் மதிப்பில் புதிய திட்டங்கள் தொடங்கியும், அடிக்கல் நாட்டியும் சிறப்பித்தார். அவற்றுள் இரண்டேகால் இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்புட்ட மேல்நிலைப் பள்ளிக் கட்டடம், ஒன்றரை இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட தொடக்கப்பள்ளிக் கட்டடம், 6 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட ஆரம்பச் சுகாதார நிலையக் கட்டடம், 2 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட பணியாளர் குடியிருப்புக் கட்டடம், 60

ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட கால்நடை துணை மையக் கட்டடம், நாலரை இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட ஆரம்பப் பள்ளிக் கட்டடங்கள், 2 மதிய சத்துணவுக் கூட கட்டடங்கள் ஆகியவற்றைத் திறந்து வைத்தும் மற்றும் குள்ளம்பட்டிக் கிராமத்தில் 1.5 இலட்சம் ரூபாய் மதிப்பில் ஒரு புதிய தொடக்கப் பள்ளிக் கட்டடம், 15 தொகுப்பு வீடுகளும் கட்ட அடிக்கல் நாட்டினார்.

இப்பகுதியில் கடந்த நான்கரை ஆண்டுக் கால கட்டங்களில் கிட்டத்தட்ட 45 இலட்சம் ரூபாய் செலவில் பல வளர்ச்சிப் பணிகள் செயல் படுத்தப்பட்டுள்ளன.

### வெங்கடதாம்பட்டி


ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த வெங்கடதாம்பட்டி ஊராட்சிப் பகுதிகளில் கடந்த நான்கரை ஆண்டுகளில் கிட்டத்தட்ட 27 இலட்சம் ரூபாய் செலவில் பல வளர்ச்சித் திட்டங்கள் செய்யப் பட்டுள்ளன. அதில் 7 இலட்சம் ரூபாய் செலவில் 2 மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளும், மூன்றரை இலட்சம் ரூபாய் செலவில் 8 சிறு பாலங்களும், 1.2 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு பள்ளிக் கட்டடமும் 4 இலட்சம் ரூபாய் செலவில் 2 சமையலறைக் கட்டடங்களும், 16 தொகுப்பு வீடுகளும் அடங்கும்.

நிகழ்ச்சி நாளன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1.1 இலட்சம் ரூபாய் செலவில் 5 தொகுப்பு வீடுகளும், ஊத்தங் கரை மருத்துவமனையில் 6 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு Sterilisationபிரிவையும், துரிஞ்சிப் பட்டியில் ஒன்றரை இலட்சம் ரூபாய் செலவில் தொடக்கப் பள்ளிக் கட்டடத்தையும், சோனக்காபட்டியில் ஒரு சத்துணவுக்கூடத்தையும், திறந்து வைத்ததோடு வெங்கடதாம் பட்டியில் 1.5 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு புதிய ஆரம்பப் பள்ளிக் கட்டடம், ஊத்தங் கரையில் 14.5 இலட்சம் ரூபாய் செலவில் துணைக் கருவூலக் கட்டடம், கொல்லநாயக்கனூரில் 1.1 இலட்சம் ரூபாய் செலவில் 5 தொகுப்பு வீடுகள் இது தவிர 75 இலட்சம் ரூபாய் செலவில் ஊத்தங்கரையில் ஒரு நீதிமன்றக் கட்டடம் கட்டவும் அடிக்கல் நாட்டினார்.

### ஒலைப்பட்டி

கடந்த நான்கரை ஆண்டு களில் சாலமரத்துப்பட்டி ஊராட்சிப் பகுதிகளில் 32 இலட்சம் ரூபாய் செலவில் பல வளர்ச்சித் திட்டங்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணையின் பேரில் செயல் படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக, 10 இலட்சம் ரூபாய் செலவில் 3 மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளும், 15 தொகுப்பு வீடுகளும், 5.5 இலட்சம் ரூபாய் செலவில் சாலை மேம்பாட்டுப் பணிகளும் அடங்கும். 9 பேருக்குத் திருமண உதவித் தொகையும், 52 பேருக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கடனுதவியும் வழங்கப்பட்டுள்ளன.

சாலமரத்துப்பட்டி தோளம்பதி, சூளக்கரை ஆகிய இடங்களில் 8.25 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட 38 தொகுப்பு வீடுகளையும், சூளக்கரை, காட்டுப்பட்டி, கருவானூர், வீராட்சிக்குப்பம், குண்டேபள்ளி ஆகிய இடங்களில் கட்டப்பட்ட 5 ஆரம்பப் பள்ளிக் கட்டடங் களையும், அரங்கனூர், செங்கம் பட்டி, அம்மன்கோயில்பதி ஆகிய 3 இடங்களில் 2 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட 3 சத்துணவுக் கட்டடங்களையும் ஆனந்தூரில் 2.5 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட சமுதாயக் கூடத்தையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள்






**12.1.96** அன்று திறந்து வைத்தார். மேலும், சூளக்கரையில் *1* இலட்சம் ரூபாய் செலவில் பொதுவிநியோகத் திட்ட அங்காடிக் கட்டடம், ஆனந்தூரில் **1.5** இலட்சம் ரூபாய் செலவில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம், **1.5** இலட்சம் ரூபாய் செலவில் ஆரம்பப் பள்ளிக் கட்டடம், அரங்கனூர் கிராமத்தில் **1.5** இலட்சம் ரூபாய் செலவில் இன்னொரு ஆரம்பப் பள்ளிக் கட்டடம், அம்மன் கோயில்பதியில் *3* தொகுப்பு வீடுகள் முதலியவற்றிற்கு அடிக்கல் நாட்டினார். மேலும், ஆனந்தூர் பொதுமக்கள் கோரிக்கையின் பேரில் விரைவில் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் அவ்வூரில் அமைக்கப் படும் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்.

பர்கூர் சட்டமன்றத் தொகுதியில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சென்ற இடங்களில் எல்லாம் பொதுமக்கள் திரண்டு வந்து, வரவேற்புக் கொடுத்த



தோடு, ஆங்காங்கே பெண்கள் ஆரத்தி எடுத்தும், அவ்வூர் வழக்கப்படி கிராமியப் பாடல்கள் பாடியும், முதல்வர் அவர்களை வரவேற்றது, குறிப்பிடத் தக்கதாகும்.



உண்மையிலேயே தமிழ் நாட்டில் ஒரு பிற்பட்டத் தொகுதியாக இருந்த பர்கூர் இன்று மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி அவர்களைத் தேர்ந்தெடுத்துச் சட்டமன்ற உறுப்பினர் ஆக்கியதால் இன்று ஒரு முற்பட்ட தொகுதியாகத் திகழ்கிறது என்றால் அதில் சிறிதளவும் ஐயமில்லை.

# போச்சம்பள்ளியில் புதிய திட்டங்களைத் தொடங்கி வைத்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை

இரண்டு நாட்களாக, பர்கூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பல்வேறு இடங்களுக்குச் சென்று ஏற்கெனவே முடித்து வைக்கப்பட்ட திட்டங்களைத் தொடங்கி வைத்தும்; கட்டி முடிக்கப்பட்ட கட்டடங்களைத் திறந்து வைத்தும் புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும் வந்துள்ளேன். நேற்று, அதாவது 11.1.1996 அன்று, 16 இடங்களுக்குச் சென்று, புதிய திட்டங்களைத் தொடங்கி வைத்த பின்பு, மாலை பர்கூரில் நடைபெற்ற, எழுச்சி மிக்க ஒரு கூட்டத்தில், 17-வது நிகழ்ச்சியாக நான் கலந்து கொண்டு உரையாற்றினேன். இன்று காலையிலிருந்து, இந்த விழாவிற்கு வரும் வரை, 14 இடங்களுக்குச் சென்று, இத்தகைய தொடக்க விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு, இப்போது 15 வது நிகழ்ச்சியாக, இந்த விழாவில் கலந்து கொண்டுள்ளேன். ஆக மொத்தம், 32 இடங்களுக்கு இதுவரை சென்று. திட்டங்களைத் தொடக்கி வைத்ததோடு, பர்கூரில், பர்கூர் சட்டமன்றத் தொகுதிக்குப்பட்ட திட்டங்களையும் இம்மாவட்டத்தின் இதரப் பகுதிகளுக்கான திட்டங்களையும் தொடக்கி வைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும் வந்துள்ளேன்.

இறுதிக் கட்டமாக, இங்கே போச்சம்பள்ளியில், 32-வது நிகழ்ச்சியாக, இந்த எழுச்சிமிகு விழாவில் கலந்து கொண்டு. பெருந்திரளாகக் குழுமியுள்ள உங்கள் அனைவரையும் நேரில் காண்பதில், நான் பெரு மகிழ்ச்சியும் பேருவகையும் அடைகின்றேன்.

தர்மபுரி மாவட்டம் விவசாயத் துறையிலும் தொழில் துறையிலும், பல காலமாகப் பின் தங்கிய ஒரு மாவட்டமாக இருந்து வந்தது. இந்த நிலையை மாற்றி அமைத்து, இம் மாவட்டத்தின் பொருளாதார மேம்பாட்டிற்கு வழி வகுக்க வேண்டும் என்று, நான் திட்டமிட்டேன், எனது அவாவினைப் பூர்த்தி செய்யும் வகையில், கடந்த நான்கரை ஆண்டுக் கால கட்டத்தில், உங்கள் அன்பு சகோதரியின் ஆட்சியில், இம் மாவட்டத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு. பல்வேறு சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப் பட்டுள்ளன.

செயல் திறன் மிக்க இந்த அரசு நல்ல திட்டங்களை, முனைப்புடன் செயல்படுத்தியதால், இந்த மாவட்டம் இன்று ஒரு புதிய பொலிவினைப் பெற்றுள்ளது என்றால் அது மிகையாகாது.


பிற்பட்ட மாவட்டமான அதுவும் குறிப்பாக மிகவும் பின்தங்கியுள்ள வளர்ச்சி அடையாத பர்கூர் சட்டமன்றத் தொகுதியைத் தேர்ந்தெடுத்து, நான் பொதுத் தேர்தலில் போட்டியிட்டதற்கு. இப்பகுதியில் உள்ள பிற்பட்ட தன்மையை நீக்கி, ஒரு நிரந்தர முன்னேற்றத்தை உருவாக்கிக் காட்ட வேண்டும் என்ற தணியாத உந்துதலே காரணம் ஆகும் கடந்த நான்கரை ஆண்டுகளுக்கும் மேலாக உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சியில், தொழில் துறையில் தர்மபுரி மாவட்டம் ஒரு புதிய ஏற்றத்தைக் கண்டுள்ளது.

## புதிய தொழிற்சாலைகள்

கடந்த நான்கரை ஆண்டுக் கால கட்டத்தில் 1,659 கோடி ரூபாய் மூலதனத்துடன் 7,235 தொழிற்சாலைகள். இந்த மாவட்டத்தில் உருவாகியுள்ளன என்பது ஒரு சாதாரண நிகழ்ச்சி அல்ல; மாறாக இது ஒரு மாபெரும் சாதனை ஆகும்.

கல்லாமையும் இல்லாமையும் ஒரு நாட்டிலிருந்து துரத்தி அடிக்கப்பட்டால்தான். அந்த நாடு எல்லா வகையிலும் வளம் பெறும்; ஏற்றம் பெறும் எனவே, தான். பிற்படுத்தப்பட்ட நிலைமையை மாற்றி அமைக்க





பொருளாதார மேம்பார்ட்டிற்கு வழி வகுக்கும் அதே நேரத்தில் இப்பகுதி வாழ் மக்கள், கல்வி அறிவைப் பெற்றுத் தங்கள் வாழ்க்கையில் மேன்மை அடைய புதிய கல்வி நிலையங்களையும், கல்விக் கூடங்களையும் ஏற் படுத்த. நான் நடவடிக்கைகளை மேற்கொண்டேன்.

### எவரும் காட்டாத ஈடுபாடு

ஒட்டுமொத்த சமுதாய வளர்ச்சியோடு தனி நபர் பொருளாதார வளர்ச்சியையும் ஏற்படுத்துவதற்கு. எங்கள் ஆட்சிக் காலத்தில் அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்கு வதில், ஒரு புதிய முனைப்பை ஏற்படுத்தினோம். வேறு எந்த ஒரு காலகட்டத்திலும் மனுதாரர் களின் மனுக்கள், இத்தனை விரைவாகப் பரிசீலிக்கப்பட்டு நலத்திட்ட உதவிகள் ஆயிரக் கணக்கானோருக்கு வழங்கப் பட்டதில்லை. குறிப்பாக வறுமை ஒழிப்புத் திட்டங்களை விரிவு படுத்தி பல்லாயிரக் கணக் கானோருக்கு அரசு நலத்திட்ட உதவிகள் சென்றடைய வழி வகை செய்தோம். கடந்த இரண்டு நாட்களில் மட்டும் 2,670 பேருக்கு ஒரு கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பில் கடனுதவிகளும் மானியங்களும் வழங்கப்பட்டுள்ளன. தனி நபர் வாழ்க்கை மேம்பாட்டிற்கு உங்கள் அன்புச் சகோதரியின் அரசு போல இதுவரை இத்தனை ஈடுபாட்டை எவரும் காட்டியதில்லை என்பது மட்டும் உறுதி.

### மகிழத்தக்க மாபெரும் சாதனை

இந்த நான்கரை ஆண்டுக் காலகட்டத்தில் இத்தொகுதியில் அதாவது பர்கூரில் ஒரு பொறியியல் கல்லூரியும், ஒரு மகளிர் கலைக் கல்லூரியும், ஒரு Polytechnic-க்கும், இம்மாவட்டத் தில், 111 புதிய கல்வி நிலையங் களும், 12 புதிய விடுதிகளும் அமைக்கப்பட்டுள்ளன என்பது நினைத்து நினைத்து மகிழத் தக்க மாபெரும் சாதனை ஆகும். இந்த உயர்கல்விக் கட்டமைப்புகள். இம்மாவட்டத்தின் கல்வித் துறையில் ஏற்படுத்தியுள்ள மகத்தான தாக்கத்தை நிச்சயமாக எவரும் மறுக்க முடியாது.

### சீர்மிகு நற்பள்ளி

குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்றால் பர்கூரில் ஒன்பதே முக்கால் கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும் பொறியியல் கல்லூரியும் மத்தூர், மற்றும் போச்சம்பள்ளிக்கு இடையே 45 இலட்சம் ரூபாய் மதிப்பில் அமைய உள்ள சீர்மிகு நற்பள்ளி அதாவது School of excellence, பர்கூரில் அமைக்கப் பட்டு வரும் Polytechnic மற்றும் மகளிர் கல்லூரிகள் ஆகிய வையும், இப்பகுதிவாழ் மக்களின் கல்வி மேம்பாட்டிற்கு ஒரு புதிய பரிமாணத்தை வழங்கும் என்று நான் உறுதியாக நம்புகின்றேன்.

### புதிய தொழிற்பேட்டைகள்

இப்பகுதி வாழ் மக்கள் அனைத்து அடிப்படை வசதி களைக் கொண்ட தொழிற் கூடங்களைப் பெற்று தொழில் முனைவோர்களாகவும் தொழில் அதிபர்களாகவும் வளர வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு SIDCO மற்றும் TACID நிறுவனங்கள் புதிய தொழிற் பேட்டைகளை இம்மாவட்டத்தில் உருவாக்கி வருகின்றன. அதிலும் குறிப்பாக நேற்று நான் பர்கூரில் தொடங்கி வைத்த பெண்களுக் கான தொழிற்பேட்டை அப் பகுதிவாழ் மகளிரின் தொழிற் முயற்சிகளுக்கு ஆக்கமும்

ஊக்கமும் வழங்கி அவர்தம் பொருளாதார மேம்பாட்டிற்கு வழி வகுக்கும் என்று உறுதியாக நம்புகிறேன். பெண்கள் தங்கள் காலிலே சுயமாக நிற்பதற்கும் சுயமாகத் தொழிலை மேற்கொள்வதற்கும் மற்றவர்களோடு சமுதாயத்தில் சரிநிகர் சமானமாக வாழ்வதற்கும் இந்தப் புதிய கல்விக் கூடங்களும் தொழிற் கூடங்களும் வழி வகுக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

### புதிய வளர்ச்சித் திட்டங்கள்

இன்று போச்சம்பள்ளி மற்றும் அதன் சுற்றுப்புறத்தைச் சேர்ந்த பகுதிகளில் புதிதாகக் கட்டி முடிக்கப்பட்ட கட்டடங்களையும் புதிய திட்டங்களையும் இரண்டரைக் கோடி ரூபாய் செலவில் தொடங்கி வைத்ததிலும் 153 கோடி ரூபாய் மதிப்பில் பல்வேறு புதிய வளர்ச்சித் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியதிலும் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

ஆக மொத்தம் இன்று 155.5 கோடி ரூபாய்க்கும் அதிகமான மதிப்பில் புதிய திட்டங்கள், இப் பகுதியின் மேம்பாட்டிற்காகச் செயல்படுத்தப்பட உள்ளன. என்பதை அறியும்போது என் மனம் ஆனந்தம் அடைகிறது.

### கூட்டுக் குடிநீர்த் திட்டம்

2 கோடியே 5 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள, போச்சம் பள்ளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைத் தொடங்கி வைத்ததில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். 24 குடியிருப்புகள் இத்திட்டத்தால் பயன் பெறுகின்றன. பாதுகாக்கப்பட்ட குடிநீரை ஒவ்வொரு குக்கிராமத்திற்கும் வழங்க வேண்டும் என்பதே நான் கண்ட கனவு ஆகும். ஒரு இலட்சிய உணர்வோடு மக்கள் பணி ஆற்றி வரும் நான் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பணியை ஒரு புனிதக் கடமையாகவே மேற்கொண்டு வருகின்றேன்.

பர்கூர் சட்டமன்றத் தொகுதியில் அமைந்துள்ள கிட்டத்தட்ட எல்லாப் பகுதிகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகளை உருவாக்கித் தருவதிலும், உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, எப்போதும் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

### புதிய பள்ளிக் கட்டடம்

போச்சம்பள்ளியில் இரண்டே கால் இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்ட மேல் நிலைப் பள்ளிக் கட்டடம், 3.5 இலட்சம் ரூபாய் மதிப்பில் மாத்தானூரில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, ஜம்புக் குட்டப்பட்டியில் 1.5 இலட்சம் ரூபாய் செலவில் ஆரம்பப் பள்ளிக் கட்டடம் போச்சம்பள்ளியில் ரூ.2 இலட்சம் செல்வில் 10 தொகுப்பு வீடுகள்; இரண்டே கால் இலட்சம் ரூபாய் செலவில் தாதம்பட்டியில் 10 தொகுப்பு வீடுகள், ஜிங்கிள் கதிரம் பட்டியில் 70.000 ரூபாய் செலவில் சத்துணவுக் கூட மையம் ஆகியவற்றையும் இன்று நான் திறந்து வைத்துள்ளேன்.

### 100 கோடி ரூபாயில் புதிய தொழிற்சாலை

மத்தூர் ஊராட்சி ஒன்றியப் பகுதி முழுமையான வளர்ச்சியைப் பெற வேண்டும் என்பதற்காகவே டாமின் நிறுவனத்தின் சார்பில் 100 கோடி ரூபாய் மதிப்பில். Molybdenum oxide தொழிற்சாலை மிக விரைவில் இப்பகுதியில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்திற்கு இன்று நான் அடிக்கல் நாட்டியதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தத் தொழிற்சாலை பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு நேரடி வேலை வாய்ப்பையும், மறைமுக வேலை வாய்ப்பையும் வழங்கும். மேலும் இந்தத் தொழிற்சாலையை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு கிளைத் தொழில்களும் துணைத் தொழில்களும். இப்பகுதியில் உருவாகும் என்பதையும், அதனால் இப்பகுதியின் பொருளாதாரம் வளர்ச்சி பெறும் என்பதையும் எண்ணி என் மனம் மகிழ்ச்சி அடைகின்றது.

### பாதுகாக்கப்பட்ட குடிநீர்

போச்சம்பள்ளிப் பகுதியின் குடிநீர்க் குறையைத் தீர்த்து வைக்க இரண்டு புதிய குடிநீர்த் திட்டங்கள் விரைவில் செயல் படுத்தப்படும் 3 கோடியே 6 இலட்சம் ரூபாய் செலவில் 41 குடியிருப்புகள் பயன்பெறும் வண்ணம் ஒரு குடிநீர்த் திட்டமும்; 4 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் 107 குடியிருப்புகள் பயன்பெறும் வண்ணம் மற்றொரு குடிநீர்த் திட்டமும் விரைவில் செயல் படுத்தப்படும் என்பதையும் இந்த இரண்டு கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கு இன்று நான்

அடிக்கல் நாட்டியுள்ளேன் என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டங்களைப் போர்க்கால அடிப்படையில் விரைந்து செயல்படுத்த் வேண்டும் என்று அதிகாரிகளுக்கு ஆணை வழங்கியுள்ளேன்.

### தொழிற்பேட்டைகள்

அதுமட்டுமின்றி TACID நிறுவனத்தின் சார்பில் போச்சம்பள்ளியில் 1400 ஏக்கர் நிலப்பரப்பில் 41 கோடியே 55 இலட்சம் ரூபாய் செலவில் மாபெரும் தொழிற்பேட்டை ஒன்று விரைவில் உருவாக்கப்படும். போச்சம்பள்ளியில் SIDCO நிறுவனத்தின் சார்பில், மேலும் ஒரு தொழிற்பேட்டை 250 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு கோடியே 41 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும். இரண்டு கூட்டுக் குடிநீர்த் திட்டங்களும் இரண்டு பெரிய தொழிற்பேட்டைகளும் போச்சம்பள்ளியில் செயல்படுத்தபடுவது ஒரு சரித்திரச் சிறப்பு மிக்க நிகழ்ச்சி என்பதில் ஐயமில்லை.

### பெண்களுக்கான தொழிற்பேட்டை

நேற்று மாலை பர்கூரில் நடைபெற்ற மாபெரும் அரசு விழாவில் சிட்கோ நிறுவனத்தின் சார்பில், பெண்களுக்கேன்றே பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட தொழிற்பேட்டையைத் தொடங்கி வைத்தேன். அதுமட்டுமின்றி அந்தத் தொழிற்பேட்டையில் அமைக்கப்பட்டுள்ள தொழிற்கூடங்களுக்கான ஒதுக்கீட்டு ஆணைகளையும், அதே விழா மேடையில் பல பெண்மணிகளுக்கும் வழங்கினேன் என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பகுதிவாழ் பெண்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு இந்த மாபெரும் முயற்சி ஒரு தூண்டுகோலாகவும் ஒரு முன்னோடித் திட்டமாகவும் அமையும் என்று உறுதியாக நம்புகிறேன்.

SIDCO நிறுவனத்தின் சார்பில், ஊத்தங்கரையில் 76 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு புதிய தொழிற்பேட்டை உருவாகவுள்ளது இந்தத் தொழிற்பேட்டை களுக்கு இன்று நான் அடிக்கல் நாட்டியதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

போச்சம்பள்ளி முருக்கம்பட்டி ஆகிய இடங்களில் 4 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 17 தொகுப்பு வீடுகள், புதுமோட்டூர் கிராமத்தில் ஒன்றரை இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு பள்ளிக் கட்டடம், போச்சம்பள்ளியில் 9 இலட்சம் ரூபாய் மதிப்பில் சந்தைக் கட்டடம் ஆகியவற்றைக் கட்டுவதற்கு, இன்று நான் அடிக்கல் நாட்டியுள்ளேன்.

இன்று 9 ஊராட்சிப் பகுதிகளைச் சேர்ந்த, 349 பேருக்கு அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகள், 23 இலட்சத்து 46,000 ரூபாய் மதிப்பில் இந்த விழாவில் வழங்கப்பட உள்ளன. பயனாளிகள் அனைவருக்கும், எனது கையினாலேயே உதவிகளை வழங்க வேண்டும் என்று நான் விரும்பினாலும் காலத்தின் அருமையைக் கருதி, 27 பேருக்கு மட்டும் நான் விழா மேடையில், உதவிகளை வழங்க உள்ளேன். மற்றவர்களுக்கு இந்த உதவிகள், இன்றே, இதே இடத்தில், அதிகாரிகளால் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### வெற்றி பெற வேண்டும்

இன்று அரசின், நலத்திட்ட உதவிகளைப் பெறுகின்றவர்கள், அவற்றை ஆதாரமாகக் கொண்டு, தங்களின் சலியாத உழைப்பை முன்னிலைப்படுத்தி, வாழ்க்கையில் வளர வேண்டும் என்றும், அவர்களது முயற்சிகள் வெற்றி பெற வேண்டும் என்றும் நெஞ்சார வாழ்த்துகிறேன்.

### எல்லாம் அதில் அடக்கம்!

**அறிவினால் உய்த்துணர்ந்து ஒப்புக் கொள்ளக்கூடியனவும், இயற்கையோடு விஞ்ஞானத்துக்கு ஒப்ப இயைந்திருக்கக் கூடியனவும் ஆன கருத்துக்களையே கொண்டு இயங்குகிறது வள்ளுவர் குறள்.**

**குறளை ஊன்றிப் படிப்பவர்கள் எல்லோரும் நிச்சயம் சுயமரியாதை உணர்ச்சி பெறுவார்கள். அரசியல் ஞானம், சமூக ஞானம், பொருளாதார ஞானம் ஆகிய எல்லாம் அதில் அடங்கியுள்ளன.**



# ரூ.2,000 கோடி செலவில் தமிழ்நாட்டில் கார் தொழிற்சாலை

## மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் முன்னிலையில் ஒப்பந்தம் கையெழுத்து

அமெரிக்காவில் உள்ள "போர்டு மோட்டார் கம்பெனி" யும் பம்பாயைச் சேர்ந்த "மகிந்திரா அண்டு மகிந்திரா" நிறுவனமும் இணைந்து தமிழக அரசின் உதவியுடன் புதிதாகக் கார் தொழிற்சாலை ஒன்றைத் தொடங்குகின்றன.

சென்னை மறைமலை நகரை ஒட்டியுள்ள கீழக்கரணை கிராமத்தில் கார் தொழிற்சாலையை நிறுவுவதற்காக, தமிழக அரசுக் கும், பம்பாயில் உள்ள "மகிந்திரா அண்டு மகிந்திரா" நிறுவனம் அமெரிக்காவில் உள்ள "போர்டு மோட்டார்" நிறுவனத்திற்கும் இடையே 3.1.96 அன்று தலைமைச் செயலகத்தில் ஒரு ஒப்பந்தம் கையெழுத்தாகியது.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் முன்னிலையில் தமிழக அரசின் சார்பில் தொழில்துறை முதன்மைச் செயலாளர் திரு சி. ராமச்சந்திரன், இ.ஆ.ப., மகிந்திரா அண்டு மகிந்திரா நிறுவன நிர்வாக இயக்குநர் திரு ஆர்.கே. பிதாம்பர், மகிந்திரா போர்டு இந்தியா நிறுவன நிர்வாக இயக்குநராக நியமிக்கப் பட இருக்கும் திரு ஜான் ஜி. பார்க்கர் ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத் திட்டனர்.

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு ம. சின்னசாமி, தலைமைச் செயலாளர் திரு என். அரிபாஸ்கர், இ.ஆ.ப., நிதித்துறை செயலாளர் திரு பி.வி. ராஜா ராமன், இ.ஆ.ப., தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு எஸ். அரவிந்த், தொழில் வழிகாட்டுதல் இயக் குநர் திரு எம். ராமன் ஆகியோர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

### ஒரு இலட்சம் கார்கள்

இந்தத் திட்டத்தின் மூலம் ஆண்டுக்கு ஒரு இலட்சம் கார்கள் உற்பத்தி செய்யப்படும். சென்னையில் இருந்து 45 கிலோ மீட்டர் தொலைவில் கீழக் கரணைக் கிராமத்தில் அமைக் கப்படும் இந்தத் தொழிற்சாலை உடனடியாகத் தொடங்கப்படும்.

1998-ஆம் ஆண்டு இறுதியில் வர்த்தக ரீதியிலான உற்பத்தி தொடங்கும். இந்தத் திட்டத்தின் மொத்த முதலீடு பல கட்டங்களில் ரூ.1,500 கோடியில் இருந்து ரூ.2 ஆயிரம் கோடி வரை இருக்கும்.

### வேலைவாய்ப்பு

தொழிற்சாலை மூலம் ஏறத்தாழ 2 ஆயிரம் பேர்களுக்கு நேரடியாகவும், 20 ஆயிரம் பேர்களுக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு உருவாக்கப் படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

தொழிற்சாலைக்காக 350 ஏக்கர் நிலம் ஏற்பாடு செய்து கொடுத்ததற்கும் மேலாகப் பல சலுகைகளைத் தமிழக அரசு வழங்கியுள்ளது. தொடக்கத்தில் இந்தத் தொழிற்சாலையில் "போர்டு பியஸ்டா" மாடல் கார்கள் உற்பத்தி செய்யப்படும். தொடக்கத்தில் இருந்தே அதிகப் பட்சமாக இந்தியாவில் உள்ள மூலப் பொருட்களைக் கொண்டே உற்பத்தி செய்ய இந்த நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியின்போது தொடக்கத்தில் அனைவரையும் வரவேற்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசியதாவது:

"பிரம்மாண்டமான அளவில் கார் தொழிற்சாலையைத் தொடங்க தமிழக அரசுடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட வந்துள்ள போர்டு மகிந்திரா நிறுவனத்தைச் சேர்ந்தவர்களை வரவேற்பதில் மகிழ்ச்சி அடை கிறேன்.

### முக்கிய மையம்

"மோட்டார் வாகனத் தொழில்

இரண்டாம் அட்டை சொல்லும் செய்தி:

களுக்கு சென்னை ஏற்கெனவே ஒரு முக்கியமான மையமாகும். சென்னையிலும் அதைச் சுற்றி யுள்ள இடங்களிலும் மோட்டார் வாகனத் துணைத் தொழிற் சாலைகள் பல இருக்கின்றன.

‘‘சென்னையில் கட்டுப் பாடான தொழிலாளர்கள் இருக் கிறார்கள். நிலையான தொழில் சூழ்நிலை நிலவுகிறது.

‘‘இந்த நிறுவனத்துக்கு தொழில் மேம்படுத்தப்பட்ட நிலம், விற்பனை வரி தொடர் பானது உள்பட பல்வேறு சலுகைகள் மற்றும் மறைமலை நகரில் தேவையான அடிப்படை உதவிகளைத் தமிழக அரசு வழங்குகிறது. இது இந்த நிறுவனத்துக்குப் பெரும் உதவி யாக இருக்கும்.

‘‘போர்டு மகிந்திரா நிறுவனம் மிக வேகமாக இந்தத் தொழிற் சாலையை அமைத்து துணைத் தொழில்களின் வளர்ச்சியை வேகப்படுத்தும் வகையில் விரி வாக்கம் செய்வார்கள் என்று நம்புகிறோம்.

‘‘போர்டு மகிந்திரா நிறுவனத் தொழிற்சாலையை அமைப்பதன் மூலம் தமிழ்நாட்டுக்கு மோட்டார் வாகனத் தொழிலில் ஒரு சர்வதேச அந்தஸ்து கிடைக்கும் என்பதில் எனக்குச் சந்தேகமே யில்லை.

‘‘உங்களுக்குத் தேவையான எல்லா உதவிகளையும் வழங்குவோம் என நான் உறுதி அளிக்கிறேன்’’.




# பொங்கல் விழா

உழவே தலை என்றுணர்ந்த தமிழர்
விழாவே இப் பொங்கல் விழாவாகும்!
காணீர்
முழுவு முழங்கிற்றுப் புதுநெல் அறுத்து
வழங்கும் உழவர்தோள் வாழ்த்துகின்
றாரே!

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற்
றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர் என்ற
சொல்லிற்
பழுதுண்டோ? காணீர் பழந்தமிழர்
“நாங்கள்
உழவரே” என்றுவிழா ஒப்பி
மகிழ்ந்தாரே!

–பாவேந்தர் பாரதிதாசன்



சிதம்பரனார் மாவட்டத்தில் வன்செயல்

# தூண்டிவிடும் சமூகவிரோதிகள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ள முதல்வர் உறுதி

## பாதிக்கப்பட்ட மக்களுக்குப் புரட்சித்தலைவி நேரடி ஆறுதல்




உற்ற தோழர்களாக, உறவு கொண்ட அன்பர்களாக, உள்ளார்ந்த நட்புடன் பழகி வந்த மக்களைத் தங்களது சொந்த இலாபங் கருதி, சமூகவிரோதச் சக்திகள் தூண்டி விடுவதால், சிதம்பரனார் மாவட்டத்தில் திடீரெனச் சட்டம் ஒழுங்குப் பிரச்சினை எழுந்தது. இதன் விளைவாக ஏற்பட்ட வன் செயலால் உயிரிழந்தும், காயம்பட்டுத் துயர்மிகுந்தும், துன்பத்தில் உழலுகின்ற மக்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறவும், விரும்பத்தகாத இந்தச் சட்டம் ஒழுங்குப் பிரச்சினையை மட்டுப்படுத்தி மீண்டும் எழாதவாறு கட்டுப் படுத்திட, சம்பவம் நடைபெற்ற இடதநிலேயே அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தி, ஆக்கப் பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் 27.12.95 அன்று திருநெல்வேலி விரைந்தார்.

சர்வதேசத் தரத்துடன் பல்வேறு விளையாட்டு அரங்குகள் உருவாக்கி, உலகமே வியந்து பாராட்டும் வகையில், இந்தியாவுக்குப் பெருமை தேடித் தரும் வண்ணம், சென்னை

மாநகரில், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், **18.12.95** அன்று தொடங்கி சிறப்புடன் நடத்திய ஏழாவது தெற்காசியப் போட்டிகளின் நிறைவு நாள் **27.12.95**. சீர்மிகு அந்நிறைவு விழாவுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தலைமையேற்பார் என்று நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், அமைதிப் பூங்காவாகத் திகழும் தமிழகத்தில், எவ்வாறேனும் அமைதியின்மையை ஏற்படுத்திட வேண்டும் என்று முயலுகின்ற சில சமூகவிரோதச் சக்திகளின் தூண்டுதலால் சிதம்பரனார் மாவட்டத்தில் நிகழ்ந்த வன் முறைச் செயல்களைத் தடுத்து நிறுத்திடவும், அந்தச் சமுதாய விரோதிகளின் தீய எண்ணத்தை முளையிலேயே கிள்ளி எறியவும், சட்டம் ஒழுங்குப் பிரச்சினை ஏற்படாமல் காத்திடுவதற்கு முன்னுரிமையளித்து, தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளின் நிறைவு விழாவில்கூட கலந்து கொள்ளாமல், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அரசு விமானத்தின் மூலம் திருநெல்வேலிக்கு விரைந்தார்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், **27.12.95** அன்று காலை **9.45** மணிக்கு அரசு விமானத்தின் மூலம் புறப்பட்டு, மதுரை வந்தடைந்தார். மதுரை விமான நிலையத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஆர். சம்பத், இ.ஆ.ப., மற்றும் முக்கிய பிரமுகர்கள் வரவேற்றனர். பின்னர் அங்கிருந்து ஹெலிகாப்டர் விமானம் மூலம், புறப்பட்டு திருநெல்வேலி காவல்துறை ஆயுதப்படைத் திடலுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வந்து அடைந்தார்.

திருநெல்வேலியில், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு வேலு, இ.ஆ.ப., சிதம்பரனார் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு டி. ஜோதி ஜெகராஜன், இ.ஆ.ப., மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் மற்றும் முக்கியபிரமுகர்கள்வரவேற்றனர்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் அங்கிருந்து புறப்பட்டு நேராக, பாளையங்கோட்டை அரசு மருத்துவமனைக்குச் சென்று அங்கு சிதம்பரனார் மாவட்டத்தில் நடைபெற்ற சம்பவத்தில் மரணம் அடைந்த ஆறு பேரின் உடலுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். பின்னர் இரண்டு விரல்கள் வெட்டப்பட்டு சிகிச்சை பெற்று வரும் திருமதி காமாட்சியைச் சந்தித்து பழக் கூடையைக் கொடுத்து அவரது உடல்நலம் பற்றி விசாரித்தார். இச்சம்பவத்தில் தனது கணவனை இழந்த அவருக்குத் தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத் தையும், ஆறுதலையும் கூறி,

தமிழக அரசின் சார்பில் அவருக்கு நிதி உதவி வழங்கப் படுகிறது என்பதைத் தெரிவித்து, அவருக்கு 1,30,000 ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார். திருமதி காமாட்சியின் கணவரின் மறைவிற்கும், அவரது விரல் வெட்டுப்பட்ட மருத்துவச் செலவிற்கும் சேர்த்து இந்தத் தொகை கொடுக்கப்பட்டுள்ளது.

அங்கிருந்த மருத்துவர்களிடம் அவருக்கு ஏற்பட்டுள்ள காயங்கள் குறித்தும் தற்போது கொடுக்கப்பட்டு வரும் மருத்துவச் சிகிச்சை குறித்தும் கேட்டறிந்தார். பின்னர் அவர் பூரண குணமடையத் தேவையான உயர்தர மருத்துவச் சிகிச்சையைத் தொடர்ந்து அளிக்க வேண்டும் என்று மருத்துவர்களைக் கேட்டுக் கொண்டார். அடுத்து தான் கொண்டு வந்திருந்த பழக் கூடைகளை அங்கிருந்த செவிலியரிடம் (Nurse)கொடுத்து அந்தப் பிரிவில் சிகிச்சை பெற்று வரும் மற்ற அனைத்து நோயாளிகளுக்கும், தனது சார்பில் பழங்களை வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

பிறகு, இந்தத் துயரச் சம்பவத்தில் மரணம் அடைந்தவர்களின் குடும்பத்தாரையும், உறவினரையும் சந்தித்து அவர்களுக்குத் தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்து ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு இலட்சம் ரூபாய் நிவாரண உதவித் தொகையை நேரில் வழங்கி ஆறுதல் கூறினார். அவர்களது இழப்பு தாங்க முடியாத பேரிழப்பு என்றும், அவர்களது துக்கத்தில் தானும் பங்கு கொள்வதாகவும்

**சுருங்கப் பேசுவோம்!**

**உண்மை** எப்போதும் சுருக்கமாய்ப் பேசப்படுகிறது. பொய்தான் விரிவாகப் பேசப் படும்.

**—லியோ டால்ஸ்டாய்**

தெரிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அந்தக் குடும்பத்தாருக்குத் தேவையான எல்லா உதவிகளையும், உடனடியாகச் செய்து தர வேண்டும் என்று இரண்டு மாவட்ட ஆட்சித் தலைவர்களையும் கேட்டுக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து பாளையங்கோட்டை அரசு விருந்தினர் இல்லத்திற்குச் சென்று அங்கு எல்லா அரசியல் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களுடனும் பேசினார். இரண்டு மாவட்டங்களிலும் சாதியின் அடிப்படையில் நடைபெற்று வரும் பிரச்சினைகள் குறித்து பொதுவாக விவாதித்து, அவர்களது கட்சியின் சார்பில் கூறப்பட்ட கருத்துக்களையும், தனிப்பட்ட முறையில் கூறப்பட்ட கருத்துக்களையும் கேட்டறிந்தார். அவர்கள் கூறிய சில ஆலோசனைகளையும், கருத்துக்களையும் உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று அதிகாரிகளுக்கு அவ்வப்போது ஆணையிட்டார். இந்தக் கூட்டம் நடைபெற்ற போது, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் மற்றும் அரசுத்துறை, காவல்துறை அதிகாரிகள் கலந்து கொண்டார்கள்.

கிட்டத்தட்ட எல்லா அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களும், தற்போது மாவட்ட நிர்வாகமும், காவல்துறையும் நன்கு முடுக்கி விடப்பட்டு, சாதியின் பெயராலும், சாதியை அடிப்படையாகக் கொண்டும் எழுகின்ற சட்ட ஒழுங்குப் பிரச்சினைய்யை உடனுக்குடன் தீர்வு கண்டு வருவதாகவும், தவறு இழைத்தவர்களை உடனடியாகக் கண்டறிந்து கைது செய்து வருவதாகவும் தெரிவித்தனர்.

சாதி உணர்வை அப்பாவி மக்களிடம் தூண்டி விடுகின்ற சமூக விரோதச் சக்திகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இதில் அரசுக்குத் தங்களது முழு ஒத்துழைப்பையும் நல்கத் தாங்களும் தங்களது கட்சிகளும் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்கள். சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகளையும், ஆயுதங்களைக் கொண்டு வன்முறையைத் தூண்டுபவர்கள் மீதும் சட்டப்படியான நடவடிக்கை எந்தப் பாரபட்சமுமின்றி எடுக்கப்படும் என்று உறுதியளித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், உயர் காவல்துறை அதிகாரிகளும், மாவட்ட ஆட்சித்தலைவர்களும் தவறு செய்பவர்களை உடனடியாகக் கண்டுபிடித்து அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

சாலை மறியலில் ஈடுபட்டு அரசுப் போக்குவரத்துக் கழகப்

# ரூ.1.26 கோடி செலவில் ஊட்டி - கோத்தகிரி நெடுஞ்சாலை மேம்பாடு

தமிழ்நாட்டில் நீலகிரி போன்ற மலைப்பிரதேசப் பகுதிகளில் ஏற்படும் நிலச் சரிவு, பெருமழை, வெள்ளம் ஆகியவற்றின் காரணமாக, மலைப்பகுதிச் சாலைகள் பழுதடைந்து, சீரான வாகனப் போக்குவரத்திற்கு இடைஞ்சல்கள் ஏற்பட்டு வருகின்றன.

மலைப்பாங்கானப் பகுதிகளில் நிலவி வரும் இந்தப் பிரச்சினையைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் கடந்த **1995-96** சட்டமன்றக் கூட்டத் தொடரின் போது, நீலகிரி போன்ற மலைப்பிரதேசப் பகுதிகளில் அமைந்துள்ள சாலைகளை மேம்படுத்தும் பணிக்காக "மலைப்பிரதேசச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்" என்ற புதிய திட்டம் ஒன்றைச் செயல்படுத்தப்படும் என்றும் அறிவித்து அதற்காக ஒரு கோடி ரூபாய் நிதியையும் நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கீடு செய்திருந்தார்கள்.

தற்போது இந்தத் திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள ஊட்டி கோத்தகிரி நெடுஞ்சாலையினைப் பழுது பார்த்து மேம்படுத்தும் பணிக்காக மேலும் **1.26** கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளார்கள். இந்த நெடுஞ்சாலையில் பாதுகாப்புச் சுவர் அமைத்தல் மற்றும் சாலையின் இரு மருங்கிலும் அமைந்துள்ள நடைபாதைகளை வலுப்படுத்துதல் போன்ற பணிகள் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும்.

---

பேருந்துகளை நாசப்படுத்தும் செயல்களைத் தடுக்க வேண்டும் என்று சிலர் கருத்துத் தெரிவித்ததற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், ஏற்கெனவே இது குறித்துத் தக்க தெளிவான அறிவுரைகளை வழங்கியிருப்பதாகவும், சாலை மறியலில் ஈடுபடுபவர்கள் மீதும், அரசுப் பேருந்துகளுக்கும், பொதுச் சொத்துக்களுக்கும் நாசம் விளைவிப்பவர்கள் மீதும், வன்முறையைத் தூண்டிவிட்டு அப்பாவி மக்களின் உயிருக்கு உலை வைப்பவர்கள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆணையிட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

பொதுவாக, இந்த இரு மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள், சாதி பேதங்களை மறந்து நல்லிணக்கத்துடன் இணைந்து வாழ விரும்புகிறார்கள் என்றும், சிலரது சுயலாபத்திற்காக வன்முறைகள் தூண்டி விடப் படுகின்றன என்றும் பல அரசியல் கட்சிகளும் முன் வைத்த கருத்தை ஏற்றுக் கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும் தங்களது ஒத்துழைப்பை நல்கினால் தமிழக அரசு அத்தகைய சமூக விரோதச் சக்திகள் மீது கடுமையான நடவடிக்கையை எடுத்து அமைதியைத் தொடர்ந்து நிலை நாட்டும் என்றும் தெரிவித்தார். வன்முறைகளால் உயிர்ச் சேதமும், பொருள் சேதமும், ஏற்பட்டு இம்மாவட்டங்களைச் சேர்ந்த தாய்மார்களும், சகோதரிகளும், படுகின்ற வேதனையைத் தான் நன்கு அறிந்துள்ளதாலும், அவர்களது குறைகளைத் தீர்க்க பொது அமைதியை நிலை நாட்டத் தக்க நடவடிக்கைகளை அனைவரின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படும் என்றும் அறிவித்தார்.

பின்னர், சமுதாயத் தலைவர்களையும் சந்தித்து அவர்களது கருத்துக்களையும் ஆலோசனைகளையும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கேட்டறிந்தார். இந்தச் சந்திப்பு கிட்டத்தட்ட சுமார் மூன்றரை மணி நேரம் நடைபெற்றது.

பின்னர் **4.15** மணிக்கு ஹெலிகாப்டர் விமானம் மூலம் புறப்பட்டு மதுரை வந்தடைந்து, அங்கிருந்து விமானம் மூலம் புறப்பட்டு மாலை **6.00** மணி அளவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்னை வந்தடைந்தார்.

**சட்டம் ஒழுங்குப் பிரச்சினையைச் சரிப்படுத்தி, சமுதாய விரோதச் சக்திகளின் சதிச் செயலை முறியடிக்கவும், வன்முறையைத் தூண்டிவிட்டு அப்பாவி மக்களைப் பலியாக்குகின்ற அநியாயச் செயலுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், காவல்துறை அலுவலர்களுக்கும், வருவாய்த்துறை அலுவலர்களுக்கும் 10 கட்டளைகள் வழங்கினார். அவை வருமாறு:**

☆ இரண்டு மாவட்டங்கள் உட்பட எல்லா மாவட்டங்களிலும் நெடுஞ்சாலை ரோந்துப் பணியை (Highway Patrolling). மேலும் தீவிரமாக மேற்கொள்ள வேண்டும்.

☆ இரண்டு மாவட்டங்களில் ஊரகப் பகுதிகளுக்குச் சென்று வரும் எல்லா அரசுப் பேருந்துகளுக்கும் ஆயுதம் தாங்கிய காவலர் பாதுகாப்பு வழங்க வேண்டும். இதன்மூலம் அரசுப் பேருந்துகளில் செல்பவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க முடியும். பின்னர் அவசியம் ஏற்பட்டால், மற்ற மாவட்டங்களுக்கும் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும்.

☆ தவறு செய்யாதவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டிருந்தால், எந்த விதமான பாரபட்சமுமின்றி, அவற்றை நன்கு ஆராய்ந்து, அந்த வழக்குகளில் மேல்நடவடிக்கைகளைக் கைவிட வேண்டும் அல்லது அவர்களை அந்த வழக்குகளிலிருந்து விடுவிக்க வேண்டும்.

☆ வன்முறைச் செயல்களில் ஈடுபடுபவர்களை உடனடியாகக் கண்டறிந்து, அவர்களைக் கைது செய்து, சட்டப்படியான மேல்நடவடிக்கைகளை உறுதியாக மேற்கொள்ள வேண்டும்.

☆ இந்த இரண்டு மாவட்டங்களிலும், மாவட்ட அளவிலும், வட்ட அளவிலும், கிராம அளவிலும், "அமைதிக் குழுக்களை" ஏற்படுத்த, ஏற்கெனவே ஆணையிட்டதைப் போல உடன் ஏற்படுத்தி அதில் பெண்களுக்குத் தேவையான அளவிற்குப் பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும். இந்த "அமைதிக் குழுக்களை" (Peace Committee) தேவையானபோது கூட்டி, பிரச்சினைகளை ஆரம்பத்திலேயே வளர விடாமல் தடுக்க, அவர்களது ஆலோசனைகளைப் பெற்று நடவடிக்கை எடுக்க வேண்டும்.

☆ மாவட்ட ஆட்சித்தலைவர்கள் தேவைப்படும்போது மாவட்ட அளவில் அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டங்களைக் கூட்டி, அவர்களது கருத்துக்களையும் ஆலோசனைகளையும் பெறலாம்.

☆ தீண்டாமைப் பழக்கத்தை எவரேனும் கடைப்பிடித்தாலோ மற்ற சமுதாயத்தினரின் மனங்கள் புண்படும்படித் தகாத முறையில் பேசினாலோ அவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கையைக் காவல் துறை மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

☆ பொதுக் கூட்டங்களில் மக்களின் உணர்வுகளைத் தூண்டும்படிப் பேசி கலவரங்களுக்கும், வன்முறைக்கும் வித்திடுபவர்களைக் கண்டுபிடித்து அவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

☆ இந்த மாவட்டங்களில், வன்முறையைத் தூண்டவும், கலகம் விளைவிக்கும் எண்ணத்துடனும் ஆயுதங்களைக் கடத்திக் கொண்டு வருபவர்கள், அவற்றை வைத்திருப்போர் மற்றும் விநியோகம் செய்வோர் அனைவரையும் கண்டுபிடித்து சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

☆ வன்முறையைத் தூண்டும் வண்ணமும், அடுத்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்களின் மனம் புண்படும்படியும், ஆட்சேபகரமான சுவரொட்டிகளை எழுதினாலோ, ஒட்டினாலோ அவர்கள் மீதும் கண்டிப்பான நடவடிக்கை விரைந்து மேற்கொள்ள வேண்டும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927



தூய
பட்டு

தூய
சரிகை



ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி


தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23
தருமபுரி மாவட்டம்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
12-1-96 ந்தேதி அடிக்கல் நாட்டப்பட்டது
தருமபுரி மாவட்டம்
12-1-96 ந்தேதி திறந்துவைக்கப்பட்டது.
தருமபுரி மாவட்டம்
11-1-96 ந்தேதி திறந்துவைக்கப்பட்டது
தருமபுரி மாவட்டம்
திப்பம்பட்டி
ஜெ.ஜெயலலிதா அவர்கள்
12-1-96 ந்தேதி திறந்துவைக்கப்பட்டது.
தருமபுரி மாவட்டம்
பாலேதோட்டம்
ஜெ.ஜெயலலிதா அவர்கள்
12-1-96ந்தேதி திறந்துவைக்கப்பட்டது
தருமபுரி மாவட்டம்
தொகுப்பு வீடுகள்
அடிக்கல் நாட்டு விழா
தருமபுரி மாவட்டம்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
தருமபுரி மாவட்டம்
மாதனக்குப்பம்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்